www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மே 2007
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

## ரிலையன்ஸே வெளியேறு!
## மே நாள் முற்றுகை!




படிப்பகம்

www.padippakam.com










ம.க.இ.க, வி.வி.மு, பு.ஜ.தொ.மு, பு.மா.இ.மு ஆகிய அமைப்புகள் மே நாளில் சென்னை ரிலையன்ஸ் ஃபிரஷ் கடையை எதிர்த்து நடத்திய முற்றுகைப் போராட்டத்திலிருந்து சில காட்சிகள்.







www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே!

● புதிய கலாச்சாரம்

● மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

● போர்: 24
● குரல்: 10,11,12
● மார்ச், ஏப்ரல், மே 2007

உள்நாடு: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706.
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

# வெனிசூலாவின் போர்ப்பிரகடனம்!

இரண்டாவது முறையாக தென் அமெரிக்க நாடான வெனிசூலாவின் அதிபராகப் பதவி யேற்ற ஹீயுகோ சாவேஸ், இவ்வாண்டு மே தினத்திற்குள் நாட்டின் முக்கியத் தொழிற் துறைகளை நாட்டுடைமையாக்கப் போவதாக அறிவித்திருந்தார். இதனை அமல்படுத்துவதற்கான அதிகாரத்தை அதிபருக்கு வழங்கும் வகையில் அரசியல் சாசனத் திருத்தத்தையும் நாடாளுமன்றத்தின் மூலம் நிறைவேற்றியிருந்தார்.

இந்த மே நாளன்று நடைபெற்ற தொழிலாளர்கள் பேரணியில் உரையாற்றிய சாவேஸ், ஒரினோகோ எண்ணெய்ப் படுகையில் இருக்கும் பன்னாட்டு முதலாளி களுக்குச் சொந்தமான முக்கியமான எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை நாட்டுடைமையாக்கும் முடிவை வெளியிட்டிருக்கிறார். இந்நிறுவனங்களில் பன்னாட்டு முதலாளிகளின் பங்குகள் சிறுபான்மையாகக் குறைக்கப்பட்டிருக் கின்றன. விலக விரும்புகிறவர்களுக்கு பழைய மதிப்பீட்டின்படி நட்ட ஈடு வழங்கப் படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி, ஐ.எம்.எப் போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களிலிருந்து விலகிக்கொள்வதாகவும் வெனிசூலா அறிவித்திருக்கிறது. இந்நிறுவனங்களை இனிமேலும் விட்டுவைத்தால் வெனிசூலாவைச் சூறையாடி விடுவார்கள் என்றும், இதுநாள் வரை அவர்கள் வெனிசுலாவிலிருந்து சுருட்டியதை திரும்பத் தரவேண்டும் என்றும் தேசியத் தொலைக்காட்சியில் முழங்கியிருக்கிறார் சாவேஸ்.

மேலும் மின்சாரம் தொலைபேசித்துறை போன்றவையும் நாட்டுடைமையாக்கப் பட இருக்கின்றன. உள்நாட்டுத் தொழில்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுப்பதற்குப் பன்னாட்டு வங்கிகள் மறுத்தால், அவையும் வெளியேற வேண்டி வரும் என்ற எச்சரிக்கையும் விடப்பட்டிருக்கிறது. வெனிசூலாவின் இரும்புச் சுரங்கங்களைத் தம் பிடியில் வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், வெட்டி யெடுக்கும் இரும்பு அனைத்தையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விடுவதால், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தமக்குத் தேவையான இரும்பு எஃகுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலை நிலவுகிறது. உற்பத்தியாகும் இரும்பை உள் நாட்டில் விற்க மறுத்தால், இரும்புக் கம்பெனிகளும் நாட்டுடைமை ஆக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் சாவேஸ்.

ஒடுக்கப்பட்ட நாடுகளைக் கேட்பாரின்றிச் சுரண்டி வரும் பன்னாட்டு முதலாளி கள் வெனிசூலாவின் இந்த அதிரடி நடவடிக்கைகளைக் கண்டு திகைத்து நிற்கின்றனர். அமெரிக்க அதிபர் புஷ்ஷும், ஏகாதிபத்திய ஊடகங்களும் சாவேஸை சர்வாதிகாரி யென்றும், வெனிசூலாவில் ஜனநாயகம் இல்லையென்றும் ஏற்கெனவே அவதூறுப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இனி அத்தகைய கூச்சலும் ஆட்சிக் கவிழ்ப்புச் சதிகளும் தீவிரமடையும் என்பதில் ஐயமில்லை.

90களிலேயே புதிய தாராளவாதக் கொள்ளைக்குப் பலியாக்கப்பட்ட லத்தீன் அமெரிக்க நாடுகளில், அவற்றுக்கு எதிராக மக்கள் நடத்திய வீரஞ்செறிந்த பல போராட்டங்களின் ஒரு விளைவுதான் சாவேஸ். பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளையைப் பாதுகாப்பதற்காக அமெரிக்காவால் நிறுவப்பட்ட பொம்மை அரசுகள், ஆட்சிக் கவிழ்ப்புகள், திவாலான பொருளாதாரங்கள், உணவுக் கலகங்கள்.. என்பவைதான் 90களில் லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தின் வரலாறு. வெனிசூலாவின் அரசு ஒரு கம்யூனிஸ்டு அரசு அல்ல என்ற போதிலும், சாவேஸின் நடவடிக்கைகள் முழு நிறைவான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் அல்ல என்ற போதிலும் தனது நடவடிக்கைகளின் மூலம், மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராடும் உலக மக்களுக்குப் பெரும் உத்வேகத்தை வழங்கியிருக்கிறார் சாவேஸ்.

பொதுத்துறைகளையும், காடுகளையும், கனிவளங்களையும் பன்னாட்டு நிறுவனங்களின் உடைமையாக்குவதன் விளைவு முன்னேற்றமல்ல, பேரழிவுதான் என்பதற்கு வெனிசூலா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகளின் கடந்த கால வரலாறு ஒரு பாடம். "இன்றைய உலக நிலைமைகளில் தனியார்மய, தாராளமயக் கொள்கைகள் தவிர்க்கவியலாதவை" என்று கூறி நந்திக்கிராமத்தையும் சிங்குரையும் நியாயப்படுத்தும் மார்க்சிஸ்டுகளுக்கோ, சாவேஸின் நடவடிக்கைகள் ஒரு சாட்டையடி. தனியார்மய தாராளமயக் கொள்கைகள் வெல்லப்பட முடியாதவை என்றும் அவற்றின் முன் சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் ஆளும் வர்க்கங்களும் போலி கம்யூனிஸ்டுகளும் செய்து வரும் பொய்ப்பிரச்சாரத்தைத் தனது நடவடிக்கைகளின் மூலம் பொய்ப்பித்திருக்கிறார் சாவேஸ்.

உலக முதலாளித்துவம் வெல்லப்பட முடியாதது அல்ல. இறையாண்மைக்கும் சுயசார்புக்கும் சோசலிசத்துக்குமான போராட்டங்கள் மென்மேலும் தீவிரமடையுமே யன்றித் தணிந்து விடாது என்ற உண்மையையும் வெனிசூலா நிரூபித்திருக்கிறது. ●

படிப்பகம்

www.padippakam.com

ம.க.இ.க, வி.வி.மு, பு.ஜ.தொ.மு, பு.மா.இ.மு:

# மே நாள் முற்றுகை!

## ரிலையன்ஸே வெளியேறு!!

மே நாள். ஆசியாவிலேயே மிகப் பெரிய காய்கனிச் சந்தையான சென்னை கோயம்பேடு வணிக வளாகம். பச்சைப் பசேலென்ற காய்களைத் தம் முதுகில் சுமந்தபடி அந்த மாபெரும் வணிக வளாகத்தின் உயிர்த் துடிப்பாய் இயங்கிக் கொண்டிருந்தனர் தொழிலாளிகள். அவர்களுடைய உரிமைக் குரலாய் செங்கொடிகளையும் பதாகைகளையும் தமது தோளில் சுமந்த வண்ணம் அந்தச் சந்தை முழுவதும் பரவிக் கொண்டிருந்தார்கள் எமது தோழர்கள். பசுமையில் பதிந்த அந்தச் சிவப்புத் தீற்றல்களை, தீக்கொன்றைகளாய்த் தீட்டிக் காட்டின விடியலின் இளங்கதிர்கள்.

**"சிறுவணிகம் சிறு தொழில்கள் உயர்த்திப்பிடி! சூறையாடும் ரிலையன்ஸைத் துரத்தியடி!"** என்ற முழக்கத்தின் கீழ் ஒரு மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியாக அறிவிக்கப்பட்டிருந்தது மேநாள் பேரணி. முந்தைய நாளின் இரவு முதலே தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கோயம்பேட்டில் வந்து குவியத் தொடங்கினார்கள் எமது தோழர்கள். இருள் பிரிந்து மேநாளாக விடியத் தொடங்கியபோது கோயம்பேடு முழுவதும் சிவந்திருந்தது.

காலை 10 மணி. பறை முழங்கத் தொடங்கியது. தொழிலாளர்களும், காய்கனி கொள்முதல் செய்ய வந்திருந்த வியாபாரிகளும் இருமருங்கிலும் நூற்றுக் கணக்கில் திரளத் தொடங்கினர் மேநாள் தியாகிகளுக்கும் நக்சல்பாரிப் போராளிகளுக்கும் வீரவணக்கம் செலுத்தும் முழக்கங்களுடன் பேரணியைத் துவக்கி வைத்தார் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் தலைவர் தோழர். முகுந்தன்.

**"கூடையில் சுமந்து காய்கனி விற்கும் சிறுவணிகர்களை ஆதரி!, கோடிகோடியாய்க் கொள்ளையடிக்கும் ரிலையன்ஸைத் துரத்தியடி!" "ஓட்டுக்கட்சிகள் எல்லோரும் ரிலையன்ஸோடு கூட்டணி! சிறுவணிகத்தைக் காப்பாற்ற நக்சல்பாரியே நம் அணி!"..** என்று பன்னாட்டு நிறுவனங்களுக்கும் மறுகாலனியாக்கக் கொள்கைகளுக்கும் எதிரான முழக்கங்கள் அந்த வணிக வளாகத்தின் நெடிய சுவர்களில் மோதி எதிரொலிக்க, பேரணி முன்னோக்கி நகர்ந்தது.

செஞ்சட்டை அணிந்த தோழர்கள், அவர்களுடைய உடலின் நீட்சியாய் கரங்களிலிருந்து உயர்ந்த செங்கொடிகள், ம.க.இ.க கலைக்குழுவின் பறை முழக்கம், ஒயிலாட்டம், போர்க்குணம் தெறிக்கும் சிலம்பாட்டம், விண்ணில் படபடத்த முழக்கங்கள் பொறிக்கப்பட்ட செம்பதாகைகள், பேரணியின் துவக்கம் முதல் இறுதி வரை தளராமல் ஒலித்த முழக்கங்கள், ஒரு கையில் தந்தையின் விரலையும் மறுகையில் முழக்க அட்டைகளையும் ஏந்தி நடந்த சிறுவர் சிறுமிகள், கைக்குழந்தைகளுடன் அணிவகுத்து வந்த தாய் மார்கள்.. உடலால் 2000 பேராகவும் உணர்ச்சியால் ஒரே மனிதனாகவும் ரிலையன்ஸை முற்றுகையிட விரைந்து கொண்டிருந்தது பேரணி.

கோயம்பேட்டிலிருந்து தென் சென்னையை இணைக்கும் விருகம்பாக்கம் மார்க்கெட் சாலை. அங்கிருக்கும் 'ரிலையன்ஸ் ஃபிரஷ்' கடை முற்றுகைப் போராட்டத்தை எதிர்பார்த்து ஏற்கெனவே மூடப்பட்டிருந்தது. கடைக்கு 50 அடி தூரம் முன்னால் சாலையில் தடையரண்களை வைத்து ரிலையன்ஸுக்குக் காவல் நின்றிருந்தது போலீசு. முற்றுகை தொடங்கியது. தார்ச்சாலை முழுவதும் படர்ந்து விரிந்தன செங்கொடிகள். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் முழக்கங்கள் தொடர்ந்தன.

ம.க.இ.க இணைச்செயலர் தோழர் காளியப்பனும், பொதுச்செயலர் தோழர் மருதையனும் போராட்டத்தின் நோக்கத்தை மக்களுக்கு விளக்கு முகமாக உரையாற்றினர். அந்த வட்டாரம் முழுவதும் வீடுவீடாக ஏற்கெனவே பிரச்சாரம் செய்யப்பட்டிருந்ததால், மக்கள் போராட்டத்தைக் கவனிப்பதில் வழக்கத்தை விட அதிகமாக ஆர்வம் காட்டினர். போக்குவரத்து நெரிசல் மிக்க அந்தச் சாலை 3 மணி நேரத்திற்கு முற்றிலுமாக மூடப்பட்டதால் ஏற்பட்ட சிரமத்தையும் சகித்துக் கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு வேன்களில் ஏற்றப்படும்போது அங்கே நேரில் வந்த கோயம்பேடு வணிகர் சங்க நிர்வாகிகள் அமைப்புத் தோழர்களுக்கு நெகிழ்ச்சியுடன் வாழ்த்து கூறினர். "எங்களுக்கும் இந்த ரிலையன்ஸ் கடைக்கும் இருக்கும் இடைவெளி வெறும் 50 அடி தூரம்தான். சிறு வணிகத்தை விழுங்கும் பன்னாட்டு

> **"எங்களுக்கும் இந்த ரிலையன்ஸ் கடைக்கும்** இருக்கும் இடைவெளி வெறும் 50 அடி தூரம்தான். சிறு வணிகத்தை விழுங்கும் பன்னாட்டு நிறுவனங்கள் எனும் பேரபாயத்திற்கும் அது குறித்த வணிகர்கள் மற்றும் மக்களின் புரிதலுக்கும் உள்ள இடைவெளிதான் இதனினும் பெரிதாக இருக்கிறது. அந்த இடைவெளியைக் குறைப்பதுதான் தற்போதைய போராட்டத்தின் எமது நோக்கம். ரிலையன்ஸை வீழ்த்த வேண்டுமென்றால் கோயம்பேடு எழுந்து நிற்க வேண்டும்."



படிப்பகம்

www.padippakam.com

நிறுவனங்கள் எனும் பேரபாயத்திற்கும் அது குறித்த வணிகர்கள் மற்றும் மக்களின் புரிதலுக்கும் உள்ள இடைவெளிதான் இதனினும் பெரிதாக இருக்கிறது. அந்த இடைவெளியைக் குறைப்பதுதான் தற்போதைய போராட்டத்தின் எமது நோக்கம். ரிலையன்ஸை வீழ்த்த வேண்டுமென்றால் கோயம்பேடு எழுந்து நிற்க வேண்டும்.'' என்று கூறி அவர் களுடைய வருகைக்கு நன்றி தெரிவித்தார் தோழர் மருதையன்.



**கோ**யம்பேடு சந்தை அதிகாலை 2 மணிக்கெல்லாம் எழுந்து விடுகிறது. உண்மையில் அது உறங்காச் சந்தை. தமிழகத்தின் எட்டில் ஒரு பங்கு மக்கட் தொகையைத் தன்னிடம் கவர்ந்து வைத்திருக்கும் சென்னை மாநகரத்தின் பசிக்கும் ருசிக்கும் ஆரோக்கியத்துக்கும் அது பொறுப்பேற்றிருக்கிறது.

ஆந்திரத்திலிருந்து வெங்காயம், பீன்ஸ், பச்சை மிளகாய், மாம்பழம்; கர்நாடகத்திலி ருந்து முட்டைக் கோஸ், பீட்ரூட், காரட், வெங்காயம், சௌசெள, முள்ளங்கி; மத்தியப் பிரதேசத்திலிருந்தும் ஆக்ராவிலிருந்தும் உருளைக்கிழங்கு; மகாராட்டிரத்திலிருந்து திராட்சை, வெங்காயம்; நாக்பூரிலிருந்து ஆரஞ்சு; ஊட்டியிலிருந்து தக்காளி மற்றும் இங்கிலீஷ் காய்கனிகள், திண்டுக்கல்லிலிருந்து அவரை, முருங்கை, சேனை; வேலூரிலிருந்து புடலை; திருச்சி, தூத்துக்குடி, கோவைப் பகுதிகளிலிருந்து வாழை, செங்கல்பட்டு, திருவள்ளூர் பகுதிகளிலிருந்து பச்சைக் காய்கறிகள், கீரைகள்.. எல்லா மாநிலங்கள் மாவட்டங்களிலிருந்தும் இரவு முழுதும் வருகின்ற 500க்கும் மேற்பட்ட லாரிகள் கோயம்பேட்டை காய்களாலும் பழங்களாலும் பூக்களாலும் நிறைக்கின்றன.

காய், கனி, பூச்சந்தை வியாபாரிகளின் எண்ணிக்கையோ சுமார் 5000. இந்தப் பசுமைத் தேக்கத்திலிருந்து மாநகரம் முழுவதற்கும் காய்கனிகளைச் சுமந்து செல்லும் வாய்க்கால்களும் ஓடைகளும்தான் சிறுவணிகர்கள். உணவு விடுதிகள், மளிகைக் கடைகள், காய்கனிக் கடைகள், தள்ளுவண்டிக்காரர்கள், தலைச்சுமை வியாபாரிகள் என ஆயிரக் கணக்கானோர் காலை 6 மணிக்குள் அனைத்தையும் கொண்டு சென்று விடுகின்றனர். காசு கொடுத்துக் கொள்முதல் செய்ய முடியாமல், சந்தையில் விழுந்து சிதறும் காய்கனிகளைக் கழுவி விற்கும் ஏழைகள் 500 பேருக்கும் சோறு போடுகிறது கோயம்பேடு.

கோயம்பேட்டின் தொழிலாளர்களும் பெரம்பலூர், திருச்சி, தென் ஆற்காடு, காஞ்சிபுரம், மதுரை எனப் பல மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். கோயம்பேட்டில் மூட்டை தூக்கிச் சம்பாதித்த காசை வைத்து விவசாயக் கடன் அடைக்க வந்த விவசாயிகள், பஞ்சம் பிழைக்க வந்த கூலி விவசாயிகள், பணம் தொலைத்தவர்கள் என உழைக்கத் துணிந்த அனைவருக்கும் கோயம்பேடு ஒரு புகலிடம். இடுப்பில் செருகிய ஒரு கொக்கியைத் தவிர வேறு கருவிகள் எதையும் எடுக்காத அந்தத் தொழிலாளிகள், நான்கு வாழைத்தார்களை அனாயாசமாகத் தூக்கிச் செல்கிறார்கள். இரண்டு வெங்காய மூட்டைகளை முதுகில் சுமந்தபடியே லாரியில் ஏறி, கலைநுட்பம் ததும்பும் ஒரு அசைவில் ஒரு மூட்டையை மட்டும் லாரிக்குள் உதறுகிறார்கள். தேங்காய்கள் இறக்கப்படும் லாரிகளை நெருங்கக் கூட முடியாமல் அதிலிருந்து பறக்கும் தும்புகள் நம் கண்ணை மறைக்கின்றன. ஆனால் லாரியில் உள்ள தேங்காய்களோ அதனினும் வேகமாக நம் கண்களிலிருந்து மறைகின்றன.

அட்டை மற்றும்
இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ள
மே நாள் முற்றுகைப்
புகைப்படங்கள்: மனோகர்
மே நாள் முற்றுகை மற்றும்
கோயம்பேடு தொழிலாளர்
புகைப்படங்கள்: செம்புலம்

• ஒரு மனிதன் சுமக்கக் கூடிய சுமையின் அளவு, சுமையைத் தாங்கி நடக்கும் உடலின் கோணம், வேகம், துடிப்பு அனைத்துக்கும், மனித உழைப்பின் பிரமிக்கத்தக்க அழகுக்கும் அன்றாடம் அங்கே புதிய இலக்கணங்கள் படைக்கப்படுகின்றன. தாயுடன் அமர்ந்து பூத்தொடுக்கப் பழகும் 5 வயதுச் சிறுமி முதல் இட்லி வியாபாரம் செய்யும் 85 வயதுக் கிழவி வரை, மூட்டை தூக்கப் பயிலும் 15 வயதுச் சிறுவன் முதல் 75 வயதிலும் லோடு இறக்கும் முதியவர் வரை மனித உழைப்பின் மறக்கவொண்ணாத பதிவுகள் அனைத்துக்கும் அது இருப்பிடம்.

எந்த ஒரு மையப்படுத்தப் பட்ட திட்டத்தின் கீழும் இந்தச் சந்தை தோன்றி வளரவில்லை. சங்கு பிடிக்காமலேயே துவங்கும் அந்த மனித ஆலையின் சுறுசுறுப்பும், மாநகரத்தின் வேகம் அனைத்துக்கும் கட்டியம் கூறும் அதன் அதிவேக இயக்கமும் கூட அது தன் இயல்பில் வரித்துக் கொண்டது தான். பரிணாமத்தில் வளர்ந்த மனித உடலின் உறுப்புக்கள் போல, சென்னை மாநகரத்தின் ஒரு உறுப்பாகத் தானே தோன்றி வளர்ந்த சந்தையே கோயம்பேடு.

**அ**ந்த உறுப்பிற்குள் ரிலையன்ஸ் ஃபிரஷ் என்ற கிருமி நுழைந்ததால் ஏற்படக் கூடிய விளைவுகளை வணிகர்களோ, தொழிலாளர்களோ துவக்கத்தில் உணரவில்லை. நகரெங்கும் தொடங்கப்பட்ட ரிலையன்ஸ் கடைகளால் சில்லறை வணிகர்களின் வரத்து கோயம்பேட்டில் குறையத் தொடங்கியது. விவசாயிகளிடமிருந்து ரிலையன்ஸ் நேரடியாகக் கொள்முதல் செய்யத் தொடங்கியதால் கோயம்பேட்டுக்கு வரும் லாரிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. இந்த வீழ்ச்சி சுமார் 20,30 விழுக்காட்டை எட்டவே விழித்துக் கொண்ட வணிகர்கள் மார்ச் 23ம் தேதியன்று கடையடைப்பும் உண்ணாவிரதமும் நடத்தினார்கள். பகத்சிங் என்ற மாபெரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளியின் நினைவு நாளில்தான் தங்களது போராட்டத்தை நடத்துகிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

சிறுவணிகத்தில் பன்னாட்டு

www.padippakam.com

நிறுவனங்களையும் தரகு முதலாளி களையும் அனுமதிக்கும் இந்தக் கொள்கை மறுகாலனியாக்கம் எனும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் ஒரு அங்கம்தான் என்பதையும் கூட அவர்கள் புரிந்திருக்கவில்லை. இந்தச் சதித் திட்டத்தில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்ற கசப்பான உண்மையையும் அவர்கள் உணர்ந்திருக்கவில்லை. எனவே கோயம்பேடு சந்தையின் வணிகர்களையும் தொழிலாளர்களையும் தட்டியெழுப்பும் பிரச்சாரத்துடன் எமது மே நாள் இயக்கம் துவங்கியது.



மார்ச் 23ம் தேதியன்று தமிழகம் தழுவிய அளவில் காய்கனி வணிகர்கள் நடத்திய கடையடைப்பிற்கு 10 நாட்கள் முன்னதாகவே சென்னை நகரில் எமது பிரச்சாரம் தொடங்கி விட்டது. 'சிறுவணிகத்தை விழுங்க வரும் ரிலையன்ஸ் வால்மார்ட்டே வெளியேறு' என்ற தலைப்பில் அச்சிடப்பட்ட சிறு வெளியீடு மிகக் குறுகிய காலத்திலேயே 5000 பிரதிகள் விற்றுத் தீர்ந்தது. கோயம்பேடு சந்தைக்குள் கலைக்குழு தொடர்ந்து நடத்திய பிரச்சாரம் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

கடை யடைப்புக்கு ஆதரவாக மார்ச் 21ம் தேதியன்று ம.க.இ.க, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகளின் சார்பில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் சிறு வணிகர்களும் கலந்து கொண்டனர். சிறுவணிகர் சங்கத் தலைவர்களும், விடுதலைச் சிறுத்தை களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் பொதுக்கூட்டத்தில் ரிலையன்சுக்கு எதிராக உரையாற்றினர்.

நிலைமையைப் புரிந்து கொண்ட ஓட்டுக் கட்சிகள் விழித்துக் கொண்டன. மக்களுக்கு எதிரான கொள்கைகளை அமல்படுத்தும் மந்திரி பதவியில் மகனை அமர்த்திவிட்டு, மக்கள் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொண்டிருக்கும் பாமக தலைவர் ராமதாசு ''இன்னும் 10 நாட்களுக்குள் ரிலையன்ஸ் மூட்டையைக் கட்டவில்லை என்றால் நடப்பதே வேறு'' என்று எச்சரிக்கை விடுத்தார். 23ம் தேதி கோயம்பேடு வணிகர்கள் நடத்திய உண்ணாவிரதத்தில் திமுக காங்கிரசு தவிர்த்த சர்வகட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு 'ஆதரவு' தெரிவித்தனர். சில்லறை வணிகத்தில் வால்மார்ட் நுழைவதை கிழக்கிந்தியக் கம்பெனியுடன் ஒப்பிட்டு அதிபுரட்சிகரமாகச் சண்டமாருதம் செய்தார் ஜெயலலிதா.

ஆனால், அடுத்த சில நாட்களுக்குள்ளாகவே எல்லா ஓட்டுக் கட்சிகளின் யோக்கியதையும் அழுகி நாறத் தொடங்கிவிட்டது. ரிலையன்ஸ் கடைக்குச் செல்லும் வாடிக்கையாளர்களின் காலில் விழுந்து 'ரிலையன்சுக்குப் போகாதீர்கள்' என்று மன்றாடினர் பாமக மகளிர் அணியினர். விடுதலைச் சிறுத்தைகளின் சட்டமன்ற உறுப்பினர்களோ ரிலையன்சை ஆதரித்து சட்ட சபையில் உறுமினர். மே.வங்கத்தில் ரிலையன்சுக்கு சிவப்புக் கம்பளம் விரித்துக் கொண்டே, இங்கே அதனை எதிர்ப்பதாகப் பம்மாத்து காட்டிய மார்க்சிஸ்டுகள் முடிந்தவரை அடக்கி வாசித்தனர். ஜெயலலிதாவின் சில்லறை அறிக்கைகளுக்கெல்லாம் முழ நீள வியாக்கியானத்தைப் பதிலாகத் தரும் கருணாநிதி இந்தச் சில்லறை வணிகப் பிரச்சினையில் மட்டும் வாயே திறக்கவில்லை.

தனியார்மய, தாராளமயக் கொள்கைகள் அமல்படுத்தப் படும்போதெல்லாம் எதிர்த்துப் போராடும் மக்களுடன் சேர்ந்துகொண்டு சவடால் அடிப்பது, பிறகு நீண்டதொரு கள்ள மவுனம் சாதிப்பது, அடுத்த தேர்தல் வரை காத்திருந்து மக்களின் அதிருப்தியை வாக்குகளாக அறுவடை செய்து கொள்வது என்ற தந்திரத்தைக் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக வெற்றி கரமாகப் பின்பற்றி வரும் ஓட்டுக் கட்சிகள் இந்தப் பிரச்சினையிலும் அதையேதான் செய்தன.

ரிலையன்ஸோ தன்னுடைய பிரச்சாரத்தை ஊடகங்களின் வழியே மிகவும் தந்திரமாக முடுக்கி விட்டுக் கொண்டிருந்தது. ''சில்லறை வணிகத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதால் வேலைவாய்ப்புகள் பெருகும், விவசாயம் செழிக்கும்'' என்று அட்டைப் படக் கட்டுரை வெளியிட்டது இந்தியா டுடே. ரிலையன்ஸ் அதிகாரிகளையும் கோயம்பேடு வணிகர்களையும் சந்திக்க வைத்து வணிகர்களின் ஆதாரமற்ற அச்சங்களுக்கு ஆணித்தரமான பதில்களை ரிலையன்ஸ் அதிகாரிகள் வழங்குவது போல கட்டுரையைத் தொகுத்து வெளியிட்டது நாணயம் விகடன். வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையனின் கேள்விகளுக்கு ரிலையன்ஸ் திருப்தி கரமாகப் பதிலளிப்பது போல கட்டுரை வெளியிட்டது குங்குமம். ரிலையன்ஸ் ஆதரவுப் பிரச்சாரம் ஊடகங்களில் தீவிரமாக நடந்து கொண்டிருக்க ரிலையன்ஸ் கடைகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருந்தது.

கடந்த பத்தாண்டுகளில் தனியார்மய தாராளமயக் கொள்கைகளுக்கு எதிராக ஏராளமான மக்கள் போராட்டங்கள் நடந்திருந்த போதிலும், இந்தக் கொள்கைகளெல்லாம் எதிர்ப்பே இல்லாமல் அமலாகிக் கொண்டிருப்பதைப் போன்ற தோற்றம் திட்டமிட்டே உருவாக்கப்பட்டிருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் ஏகபோக முதலாளிகளுடன் அரசும், அரசியல் கட்சிகளும், ஊடகங்களும் இணைந்து கொண்டு இத்தகையதொரு தோற்றத்தைத் திட்டமிட்டே உருவாக்கியிருக்கின்றன. இதன் விளைவாக எதிர்த்துப் போராடும் மக்கள் வெகு சீக்கிர மாகவே சோர்வுக்கும் அவநம்பிக்கைக்கும் கையறு நிலைக்கும் ஆளாவதும் நடக்கிறது.

அவரவர் கோரிக்கைக்கு அவரவர் போராடுவது, அடுத்தவன் பிரச்சினையைக் கண்டுகொள்ளாமலிருப்பது, அனைவரது பிரச்சினைகளுக்கும் காரணமான பொது எதிரியை அடையாளம் காணத் தவறுவது போன்ற


படிப்பகம்

www.padippakam.com

> **"இந்தப் பிரச்சார இயக்கத்தின்போது** நாம் சந்தித்த சிறு வணிகர்கள் அனைவரிடம் கோபத்தைக் கண்டோம். ஆனால் அந்தக் கோபத்துக்கு இலக்கு இல்லை. அதற்கு இலக்காக வேண்டிய ஓட்டுக்கட்சிகள் வணிகர்களின் போராட்ட மேடையில் கொலுவிருந்தார்கள். அவர்களுடைய ஆரவாரப் பேச்செல்லாம் பொய் என்று தெரிந்திருந்தும் வணிகர்களும் தொழிலாளர்களும் அவற்றைக் கேட்டு ஆறுதல் அடைந்துகொண்டார்கள். அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்ளலாம் என்று தம்மைத்தாமே சமாதானப் படுத்திக் கொண்டார்கள்."

குறைபாடுகள் எதிரிகளின் வெற்றியை எளிதாக்கி வந்திருக்கின்றன. எதிரியின் கருத்துக் களில் மக்கள் மூழ்கடிக்கப் பட்டிருக் கின்றனர். அவற்றில் ஆழ்ந்து தனக்கெதிரான கருத்தைத் தன் வாயா லேயே பேசும் நிலைக்கு மக்கள் ஆளாக்கப் பட்டிருக்கின்றனர். இந் நிலையை மாற்ற வேண்டுமானால் மக்கள் மத்தியிலான கருத்துப் பிரச் சாரம் மிகவும் அவசியம் என்பதால் உடனே எமது பிரச்சாரத்தைத் துவங்கினோம்.

1,50,000 பிரசுரங்கள், ஆயிரக் கணக்கான சுவரொட்டிகள், சுவ ரெழுத்துக்கள், 25,000 சிறு வெளியீடு களுடன் தமிழகம் தழுவிய அளவில் பிரச்சாரம் செய்வது; சிறுவணிகர்கள், ரிலையன்ஸ் கடைகளின் சுற்று வட்டார த்தில் வாழும் மக்கள், அதன் வாடிக்கை யாளர்களாக மாறிக்கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோர் மத்தி யில் வீடு வீடாகப் பிரச்சார இயக்கம் மேற்கொள்வது; அதன் இறுதியில் மேநாளன்று முற்றுகைப் போராட்டம் நடத்துவது என்று திட்டமிட்டோம். இப்பிரச்சாரம் தமிழகம் தழுவிய அளவில் நடைபெற்றதெனினும் போராட்டப் பகுதியான சென்னையில் கூடுதல் கவனம் கொடுத்துப் பிரச்சாரம் செய்தோம். பரந்து விரிந்த சென்னை முழுதும் மிகக் குறுகிய காலத்தில் பிரச்சாரம் செய்ய வேண்டியிருந்ததால் தோழர்கள் பலர் முழுநேர மாகப் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டனர்.

**செ**ன்னையின் காய் கனிச் சந்தைகள் அனைத்தை யும் கண்ணீர்ச் சந்தைகளாக மாற்றியிருக்கிறான் அம் பானி.

சென்னை நகரில் காய் கனிச் சந்தைகள் இருக்கு மிடங்களையும் தனியார் காய்கனி அங்காடிகள் இருக்கு மிடங்களையும் குறி வைத்துத்தான் ரிலையன் ஸின் எல்லாக் கடைகளுமே திறக்கப் பட்டிருக்கின்றன, மூன்று நான்கு மடங்கு வாடகையும் பத்து மடங்கிற்கு மேல் முன்பணமும் கொடுத்து இத்தகைய இடங்களில் கடைகள் பிடிக்கப் பட்டிருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட காய்க்கு சென்னை முழுவதும் ஒரே விலையை ரிலை யன்ஸ் நிர்ணயிப்பதில்லை. அருகாமை யில் உள்ள காய்கனிச் சந்தையில் விலை விசாரித்து, வேண்டுமென்றே அதைக் காட்டிலும் 10,20 காசுகள் குறைவாக விலை நிர்ணயிக்கப்படுகிறது.

போரூர், பாண்டி பஜார், எல்டாம்ஸ் சாலை, புரசைவாக்கம் போன்ற பகுதி களின் காய்கனிச் சந்தைகள் ஒரே மாதத்தில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்றன. சாப்பாட்டை இரண்டு வேளையாக்க் குறைத்துக் கொண்டு விட்டோம் என்றார் ஒரு பாண்டி பஜார் வணிகர்; இன்னொரு குடும்பம் வாடகை கொடுக்க முடி யாமல் தெருவிலேயே குடியேறி விட்டது; மீட்டர் வட்டிகட்டமுடியா மல், கந்துவட்டிக் காரனின் வசவையும் கேட்க முடியாமல் இந்த வயதுக்கு மேல் எந்த வேலைக்குப் போவது என்று தவிக்கிறார்கள் எல்டாம்ஸ் ரோடு மார்க்கெட்டின் பெண்கள்.

"விலையில பெரிய வித்தியாசம் கிடையாது. அவன் ஏசியில வச்சிருக் கான். நாங்க தூசியில வச்சிருக்கோம். அதான் வித்தியாசம்" "பவுடர் போட்ட பொண்ணைப் பாத்து மயங்குற காலம் தான இது" "அவன்கிட்ட பணம் இருக்குது, கடை போட்டு உக்காந் திருக்கான். நம்ம கிட்ட பணமில்ல; ரோட்டுல இருக்குறோம். இடம் நம்மளுதில்ல, சரக்கு நம்மளுதில்ல, கடனும் பட்டினியும்தான் நம்மளுது" "புருசன் குடிகாரன், வருமானமில்ல, இப்ப வியாபாரமுமில்ல, எங்க போயி வாழறதுன்னே தெரியல" "எத்தனை வருசமா பழகியிருக்குறோம், உங்க வீட்டு நல்லது கெட்டதுக்கு வந்திருக்கு றோம். பாக்கி வைப்பீங்க. கொடுத்தா உண்டு இல்லன்னா இல்ல. அம்பானி கிட்ட கடன் சொல்லுவியா" "நாம சனங்கள எப்பிடிக் கேக்க முடியும்? நம்மை எதிர்பார்த்து அவுங்க வாழல. நாமதான் அவுங்கள எதிர்பார்த்து வாழறோம்".. ஏழை வியாபாரிகளின் கோபங்களும் குமுறல்களும் ஒவ் வொரு சந்தையிலும் விதம் விதமாக வெடித்துத் தெறித்தன.

தங்கள் துயரங்களைக் கேட்கவும் தங்களுக்காகப் பேசவும்கூட ஒரு அமைப்பு இருக்கிறதா என்று அதி சயித்து நெகிழ்ந்து போனார்கள் காய்கனிச் சந்தைகளின் பெண்கள். சமூகத்துயரத்தைப் பேச வந்த நம்மிடம் உழைக்கும் மக்களுக்கே உரிய வெகு ளித்தன்மையுடன் சொந்தத் துயரையும் கலந்து பேசினார்கள். உணவைப் பகிர்ந்து உபசரித்தார்கள். "அரசாங்கமே அவன் பக்கம் இருக்கும்போது உங்களால என்னப்பா செய்ய முடியும்" என்று நம்மீது இரக்கப் பட்டார்கள். "அரசாங்கம் அவன் பக்கம்தான் இருக் கிறது, மக்களை நம் பக்கம் கொண்டு வருவதற் குத்தான் நாங்கள் வேலை செய் கிறோம்" என்று அவர் களுக்குப் புரிய வைத்தோம்.



உற்பத்தி செய்கின்ற விவ சாயியையும், விற்பனைக்குக் கொண்டு செல்லும் வியா பாரியையும், விலைக்கு வாங்கும் மக்களையும் இணைக்கின்ற பொது

www.padippakam.com

முழக்கம் ஒன்று இல்லாமல் வியாபாரிகளின் கோபமும், விவசாயிகளின் ஏமாளித்தனமும், வாடிக்கையாளனின் பாமரத்தனமும் தனித்தனியாக அம்பானியிடம் சரணடைந்து கொண்டிருந்தன.



தன் வீட்டு வாயிலுக்கே வந்து காய்களையும் கீரைகளையும் வழங்கிய கூடைக்காரப் பெண்ணின் நெடுநாள் பழக்கம், ''அம்மா கீரைம்மா..'' என்று ஒலிக்கும் அந்தக் குரலில் இழைந்து வழியும் சோகம், காய்கனிகள் வழியாகவே நோய்நொடிகளுக்குக் கைவைத்தியம் கூறும் அந்தப் பெண்ணின் நேசம்... அனைத்தையும் ஒரே கணத்தில் உதறிவிட்டு, தன்னை நோக்கி வருமாறு வாடிக்கையாளனுக்கு அம்பானி போடும் சொக்குப் பொடி என்ன என்று தெரிந்து கொள்ளாதவரை, ரிலையன்ஸுக்கு மயங்கும் மக்களைத் தெளிய வைக்க இயலாதென்பதால் ஆங்காங்கே ரிலையன்ஸ் கடைகளுக்குள்ளேயும் நுழைந்தோம்.

ரிலையன்ஸ் ஃபிரஷ் கடையின் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தால் சில்லென்ற குளிர் காற்று முகத்தில் அடிக்கிறது. கோயம்பேடு சந்தையில் காய்கனிகளிலிருந்து வீசும் நறுமணம் அவற்றைப் புதியவை என்று அறிமுகம் செய்கிறது. இங்கோ வாடிக்கையாளரின் தோலுக்குப் புத்துணர்ச்சி யூட்டுவதன் மூலம் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் காய்கனிகள் 'ஃபிரஷ்ஷானவை' என்று நம்ப வைக்கிறான் அம்பானி.

காய் கனிகளின் மீது மட்டும் வீசும் விளக்கொளி, அவ்வப்போது அவற்றை அடுக்கி வைக்கும் பணி யாளர்கள்; வெட்டி உரையிலிட்டுச் சமையலுக்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கும் காய்கள்; காபூல் மாதுளை, அமெரிக்க இனிப்புச் சோளம், ஸ்ட்ரா பெர்ரி பழங்கள், ஆஸ்திரேலிய திராட்சை என்று சர்வதேசச் சுவைக்கு அலையும் நாக்குகளைச் சுண்டியிழுக்கும் தூண்டில்கள்; சமையலறை உபகரணங்கள், பாத்திரங்கள், விதம்விதமான துடைப்பங்கள்! மகாராட்டிரத்தின் பண்ணையில் விளைந்து கிண்டியில் பாக்கிங் செய்யப்பட்ட ரிலையன்ஸ் பொன்னி, ரிலையன்ஸ் பாசுமதி, துவரை, உளுந்து, பயறு முதல் அரிசி வரை அனைத்தும் ரிலையன்ஸ் பிராண்டுகள்.

அந்தக் கடையில் செல்போன் ரீசார்ஜ் கார்டு வாங்கினால் தள்ளுபடி, தொடர்ச்சியாக அங்கே வாங்குபவர்களுக்கு இலவசமாக ரிலையன்ஸ் வாகன இன்சூரன்சு, கோக், பெப்சி, சாக்லெட்டுகள் போன்ற அற்பத்தனமான இலவசங்கள், கடைக்கு உள்ளே நுழையும் ஒவ்வொரு வாடிக்கையாளரையும் ரிலையன்ஸ் கடையின் நிரந்தர உறுப்பினராக மாற்றுவதற்கான விண்ணப்பப் படிவத்துடன் இனிமையாக நச்சரிக்கும் விற்பனைப் பெண்கள், ஒரு கடையில் ஒரு கிலோ தக்காளி வாங்கினால் உடனே மொத்தக் கையிருப்பில் ஒரு கிலோ குறைந்து விட்டதைக் காட்டும் அளவுக்கு மையப்படுத்தப்பட்ட கணினி நிர்வாகம், பொருட்களைக் கொண்டு செல்லும் தள்ளுவண்டிகள், நடுத்தர வர்க்கத்தின் அசட்டு அதிகாரத்துக்குப் பணிவுடன் பதிலளிக்கும் சீருடைப் பணியாளர்கள், இவற்றில் மதிமயங்கி ஒரேயொரு 10 ரூபாய் அவல் பாக்கெட்டைக் கையில் வைத்துக் கொண்டு பில் போடுவதற்காக வரிசையில் காத்து நிற்கும் அறிவாளிகள்.. இதுதான் ரிலையன்ஸ்.

ரிலையன்ஸ் கடைகளின் சுற்று வட்டாரத்தில் வீடுவீடாப் பிரச்சாரம் செய்தபோது, ''அப்படியா, அங்கே வாங்கக் கூடாதா?'' என்று வெகுளித்தனமாகப் பலர் கேள்வி எழுப்பினார்கள். அப்படி ஒரு கருத்தையே பெரும்பாலான மக்கள் அப்போதுதான் முதன் முறையாகக் கேள்விப் படுகிறார் கள். ''உங்களுடைய காசு நம்முடைய மக்களை வாழவைப்பதற்குப் பயன்பட வேண்டும். அவர்களை அழிக்கப் பயன்படக்கூடாது'' என்ற ஒரேயொரு நியாயமே பல பேருக்கு உண்மையைப் புரிய வைக்கப் போதுமானதாக இருந்தது.

பிரச்சினையை ஆழமாகப் புரிந்து கொள்ளாத போதிலும் ''அந்தக் கடைக்குப் போகும் பாவத்தை இன்னொரு முறை செய்ய மாட்டேன்'' என்று நிலப்பிரபுத்துவ இரக்கவுணர்ச்சியுடன் சிலர் வருத்தம் தெரிவித்தார்கள். மலிவு என்று வாதாடியவர்கள், ''அது ஏகபோக முதலாளிகளின் தந்திரம்'' என்பதை கோக், பெப்சி உதாரணங்களிலிருந்து கூறியவுடன் புரிந்து கொண்டார்கள். ''ஏன் அவன் மலிவாகத் தருகிறான் வாங்கினால் என்ன?'' என்று இரக்கமின்றி வாதாடியவர்களிடம் ''உன்னை வேலை நீக்கம் செய்து விட்டு, உன்னை விட மலிவாக பாதி சம்பளத்துக்கு ஆள் கிடைத்தால் வைத்துக் கொள்ளலாமா, அதை ஒத்துக் கொள்வாயா?'' என்று திருப்பிக் கேட்டோம். வாயடைத்துக் கொண்டார்கள்.

பார்ப்பனர்கள் மிகுதியாக வாழும் மடிப்பாக்கம், பழவந்தாங்கல் பகுதிகளில்தான் ரிலையன்ஸ் ஆதரவு குரூரமாக வெளிப்பட்டது. பிரசுரத்தை வாங்கினால்கூடத் தீட்டுப் பட்டுவிடும் என்பதைப் போல விரட்டினார்கள். நாம் பேசத் துவங்குவதற்கு முன்னரே 'எல்லாம் எங்களுக்குத் தெரியும்' என்று கதவைச் சாத்தினார்கள். அந்தப் பகுதிகளில் கடை திறப்பதற்கு முன் வீடு வீடாகச் சென்று சந்தனமும் சர்க்கரையும் கொடுத்து அவர்களை வரவேற்றிருக்கிறது ரிலையன்ஸ் நிர்வாகம். வர்க்க வெறுப்பும் சாதிய வெறுப்பும் ஒருங்கே வெளிப்பட்ட இந்தத் தீவுகளைத் தவிர வேறெங்கும் இத்தகைய இரக்கமின்மையை நாம் எதிர்கொள்ளவில்லை.

''ரிலையன்ஸுல ஷாப்பிங் பண்ணப் போனேன்'' என்று பீற்றிக் கொள்ளும் அற்பத்தனம், கண்ணாடிக் கதவையும் ஏ.சி அறையையும் தரத்தின் அளவுகோல்களாகக் கருதி மயங்கும் மடமை, காசு பண உறவைத் தவிர வேறு எதையும் ஒரு பொருட்டாகக் கருதத் தேவையில்லை என்று மறுகாலனியாக்கம் பயிற்றுவித்திருக்கும் பண்பாட்டுத் தடித்தனம், ''அதற்கு நான் என்ன செய்ய முடியும்'' என்று தோளைக் குலுக்கும் ஐ.டி வர்க்கத்தின்


படிப்பகம்

www.padippakam.com

**போரூர், பாண்டி பஜார்,** எல்டாம்ஸ் சாலை, புரசைவாக்கம் போன்ற பகுதிகளின் காய்கனிச் சந்தைகள் ஒரே மாதத்தில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்றன. சாப்பாட்டை இரண்டு வேளையாகக் குறைத்துக் கொண்டு விட்டோம் என்றார் ஒரு பாண்டி பஜார் வணிகர்; இன்னொரு குடும்பம் வாடகை கொடுக்க முடியாமல் தெருவிலேயே குடியேறிவிட்டது; மீட்டர் வட்டி கட்ட முடியாமல், கந்துவட்டிக்காரனின் வசவையும் கேட்க டியாமல் இந்த வயதுக்கு மேல் எந்த வேலைக்குப் போவது என்று தவிக்கிறார்கள் எல்டாம்ஸ் ரோடு மார்க்கெட்டின் பெண்கள்.

சமூக உணர்வற்ற திமிர்த்தனம், இதனை முன்னேற்றம் என்று கூறி வாதாடும் அரசியல் தற்குறிகளின் ஆணவம்.... மக்களிடம் நிலவும் இத்தகைய போக்கு கள்தான் ரிலையன்ஸைப் பாதுகாக்கும் கவசங்களாக இயங்குகின்றன. இந்தக் கவசத்தைப் பிளக்காமல் இன்று கடை விரித்திருக்கும் ரிலையன்ஸையோ, நாளை வரவிருக்கும் வால் மார்ட்டையோ நாம் முறியடிக்க முடியாது.

மக்களிடம் நிலவும் இந்தக் கருத்துக்கள் எல்லாம் அம்பானி உருவாக்கிய கருத்துகள் அல்ல. கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தனியார் மய, தாராளமயக் கொள்கைகளைத் திணித்து வரும் ஆளும் வர்க்கங்களும் அவர்கள் பிடியில் உள்ள ஊடகங் களும் உருவாக்கிப் பரப்பியுள்ள கருத்துகள். இந்த மறுகாலனியாக்கக் கொள்கைகளை மாறி மாறி அமல் படுத்தும் ஓட்டுக்கட்சிகளால் உலவ விடப்பட்டுள்ள கருத்துகள். 'ரிலை யன்ஸே வெளியேறு' என்ற குரல் வணிகர்களின் குரலாக மட்டும் இருக்கு மானால், ஏகபோக நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் குரலுக்குள் ஒளிந்து கொண்டு, 'மலிவு, தரம், இலவசம்' என்று மக்களை மயக்க முடியும். அதுவே மறுகாலனியாக்கத் துக்கு எதிரான முழக்கமாக மாறும் போதுதான் அது மக்கள் முழக்கமாக மாறமுடியும்.

இந்தப் பிரச்சார இயக்கத்தின்போது நாம் சந்தித்த சிறு வணிகர்கள் அனைவரிடமும் கோபத்தைக் கண்டோம். ஆனால் அந்தக் கோபத்துக்கு இலக்கு இல்லை. அதற்கு இலக்காக வேண்டிய ஓட்டுக்கட்சிகள் வணிகர்களின் போராட்ட மேடையில் கொலுவிருந் தார்கள். அவர்களுடைய ஆர வாரப் பேச்செல்லாம் பொய் என்று தெரிந்திருந்தும் வணிகர் களும் தொழிலாளர் களும் அவற்றைக் கேட்டு ஆறுதல் அடைந்து கொண் டார்கள். அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்ளலாம் என்று தம்மைத்தாமே சமாதானப் படுத்திக் கொண்டார்கள்.

வணிகர்கள் மட்டுமல்ல, வலிமை யான தொழிற்சங்கங்களைக் கொண்ட தொலைபேசி, வங்கி, பொதுத்துறை ஊழியர்களும் கடந்த பத்து ஆண்டுகளில் இதைத்தான் செய்திருக் கிறார்கள். இவையெதுவும் எந்தத் துறையையும் காப்பாற்றவில்லை. இந்த வழிமுறைகளின் தோல்வி கடந்த பத்து ஆண்டுகளில் பலமுறை நிரூபிக்கப் பட்டிருக்கிறது. ஓட்டுக் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மக்கள் இயக்கத் தைக் கட்டியமைப்பது ஒன்றுதான் மறுகாலனியாக்க நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழி.

தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் மக்கள் தற்கொலையை நோக்கித்தான் தள்ளப்படுவார்கள். நாங்கள் சந்தித்த காய்கறிச் சந்தைகளில் வியாபாரம் பாதியாகக் குறைந்திருந்தது. போரூர் காய்கறிச் சந்தைக்கு நாளொன்றுக்கு 3 வேன்கள் காய்கனி வருவதாகச் சொன் னார்கள் வணிகர்கள். அருகிலுள்ள ரிலையன்ஸ் கடைக்கும் நாளொன் றுக்கு 3 வேன் வருகிறது. பிழைப்பதற்கு வேறு தொழிலீ தேடு வதைத் தவிர அந்த ஏழை வியாபாரிகளுக்கு வேறு வழியில்லை. அடுத்த தேர்தல் எனும் கானல் நீரை நம்பி அவர்கள் காத்திருக்க முடியாது.

கடன், பட்டினி, மரணம்.. ஒரு இலட்சம் விவசாயிகளைத் தற்கொலைக் குத் தள்ளிய விஷச்சுழல் இதுதான். ஒரு இலட்சம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட பிறகும் மாகாராட்டிர விவசாயிகளின் பருத்திக்கு நியாய விலை கிடைத்து விடவில்லை. ஆனால் துப்பாக்கித் தோட்டாக்களுக்குப் பலி யான கலிங்கநகரின் 13 பழங்குடி மக்கள், தங்களுடைய நிலத்தில் கால் வைக்க விடாமல் டாடாவைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்; போலீசையும் மார்க்சிஸ்டுகளின் குண்டர் படையை யும் துணிவுடன் எதிர்கொண்ட நந்திக் கிராமத்து மக்கள் சிறப்புப் பொருளா தார மண்டலத்தை வெளியேற்றி இருக்கிறார்கள்; சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்த்துப் போராடும் மக்கள் அனைவருக்கும் நம்பிக்கை ஊட்டியிருக்கிறார்கள்.

கோயம்பேட்டின் சுமை தூக்கும் தொழிலாளிகளும், தரைக்கடை தள்ளு வண்டி வியாபாரிகளும், மளிகைக் கடையிலேயே மக்கி மடியும் அண்ணாச்சிகளும் அஞ்சுவதற்கு ஏது மில்லை. எனினும், அன்று எமது மே தினப் பேரணியை அருகில் நின்று ஆதரித்த அவர்கள் அனைவரும் அப்படியே அணிதிரண்டு வந்துவிட வில்லை. அவ்வாறு அந்தக் கணமே வந்து விடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கவுமில்லை.

அவர்கள் அருகில்தான் இருந்தார்கள்; எனினும் சற்றுத் தொலைவில் இருந்தார்கள். அன்று முற்றுகைக்கு உள்ளான ரிலையன்ஸ் கடையும் கூட எமக்கு அருகில்தான் இருந்தது; எனினும் சற்றுத் தொலைவில் இருந்தது. அந்த இடைவெளியை நிரப்புவதற்கு வணிகர்களும் தொழிலாளர்களும் வருவார்கள். அதுவரை எமது முற்றுகையும் தொடரும்.



**● பு.க செய்தியாளர்கள், சென்னை**



படிப்பகம்

www.padippakam.com

# உலகக் கோப்பைக் கிரிக்கெட்:

# சூதாடித் தோற்ற பன்னாட்டு நிறுவனங்கள்!



மேற்கிந்தியத் தீவுகள், மார்ச் 23. முதலில் ஆடிய இலங்கை அணி 254 ஓட்டங்களை எடுக்க, நடுத்தரமான இந்த இலக்கை இந்திய அணி சும்மா ஊதித் தள்ளிவிடும் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். முதல் ஆட்டத்தில் வங்கதேசத்தால் புரட்டிப் போடப் பட்டிருந்தாலும் இந்த எதிர்பார்ப்பு இருக்கவே செய்தது.

அதன் காரணம் கட்ந்த ஒரு வருடமாக உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி பற்றியும் அதில் இந்திய அணி வெல்லப் போவது குறித்தும் நாடு முழுக்க வெறியும் விளம்பரமும் போதையும் வகை தொகை இல்லாமல் ஏற்றப்பட்டிருந்தன. சொல்லப் போனால் இந்திய அணி ஏற்கெனவே கோப்பையை வென்றுவிட்டது போலவும், சும்மா மேற்கிந்தியத் தீவுகளுக்கு ஜாலியாகப் பயணம் செய்து கோப்பையைப் பெட்டியில் எடுத்து வரவேண்டியதுதான் பாக்கி எனுமளவுக்கு பக்தி முற்றியிருந்தது.

இந்தக் களிவெறி பக்தியில் மஞ்சள் தண்ணி தெளித்து விடப்பட்ட பலியாடுகளைப் போன்ற இரசிகர்களின் பங்கு பாதி. மீதி இந்தப் பலியாடுகளைச் சாமியாட வைத்து அவைகளிடம் தொலைக் காட்சிப் பெட்டிகளையும், கோலாக்களையும், பிஸ்கட் - சாக்லெட்டுகளையும், செல்பேசிகளையும், இரு சக்கர வாகனங்களையும் விற்று இலாபமள்ள நினைத்த பன்னாட்டு நிறுவனங்கள், இவற்றுக்கான விளம்பரங்களை வெளியிட்டு ஆதாயமடைய முயன்ற ஊடக முதலாளிகள், இந்த விளம்பரங்களில் நடித்து கோடிகளில் ஊதியம் பெற்ற கிரிக்கெட்டின் நட்சத்திர வீரர்கள்.

முதலாளிகளின் கனவு இலாபம். இரசிகர்களின் கனவு இந்திய அணியின் வெற்றி. ஆயினும் இந்திய அணி களத்தில் வெற்றிபெற வேண்டுமென்றால் ஆடவேண்டும் என்ற உண்மையை மட்டும் யாரும் சட்டை செய்யவில்லை.

பரஸ்பரக் கனவு புஸ்வாணமானது. இலங்கையின் இலக்கை எட்ட முடியாமல் இந்திய அணி படுதோல்வியடைந்தது. ஒவ்வொரு வீரரும் அவுட்டாகித் திரும்பி வருவதைப் பார்த்துக் கொண்டிருந்த ஏனைய வீரர்கள் தங்களது முகங்களைச் சோகமாக வைத்துக் கொள்ள மிகவும் சிரமப்பட்டார்கள். விளம்பரப் படங்களில் மட்டுமல்ல, இங்கும் நடிப்பதற்கு அவசியம் இருந்தது. இந்தத் தோல்வியின் மூலம் போட்டியிலிருந்தே வெளியேற்றப்படுவதால் வரும் நாட்களில் இந்திய ரசிகர்களிடமிருந்து கிடைக்கப் போகும் அர்ச்சனை குறித்து அவர்களுக்குத் தெரியும். அதை குறைக்கும் முகமாகத்தான் வலிந்து வரவழைத்துக் கொண்ட இந்த சோகம்.

மற்றப்படி உலகக் கோப்பைத் தோல்வியெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. ஆடுவதால் வரும் வருவாயை விட நடிப்பதால் வருவதுதான் அதிகம். டெண்டுல்கரின் ஒருவருட விளம்பர ஊதியம் குறைந்த பட்சமாக 2.5 கோடி, திராவிடுக்கு 1.5 கோடி, யுவராஜ் சிங்குக்கு 1 கோடி, கங்குலி -தோனிக்கு தலா 80 இலட்சம், சேவாக்குக்கு 50 இலட்சம், இன்னும் நட்சத்திர மாகாத வீரர்களுக்கு குறைந்தது 30 இலட்சம் என்று போகிறது பட்டியல்.

**"இந்தியா குறைந்த பட்சம் சூப்பர்-8 பிரிவுக்காவது தகுதிபெற்று பின் அரை இறுதிக்குச் சென்றுவிடும், இந்த நாட்களில் விளம்பரங்கள் மூலம் பொருட்களை விற்றுக் கல்லா கட்டலாம் என்று மனக்கோட்டை கட்டிய பன்னாட்டு நிறுவனங்கள் இன்று பொறிகலங்கிக் கிடக்கின்றனர்."**



எனில் பத்து வருடமாக ஆடுபவர்கள் எவ்வளவு சுருட்டியிருப்பார்கள்? இந்திய அணியில் இடம்பிடித்ததை விட விளம்பர உலகில் இடம் பிடிப்பது தான் இவர்களின் இலட்சியம். ஜட்டியைத் தவிர உடம்பு, உடை முழுக்க நிறுவன முத்திரைகளை பச்சை குத்தியிருக்கும் இந்த 'விலைமாந்தர்களிடம்' தேச பக்திக் கற்பை எதிர்பார்ப்பது எங்ஙனம்?

இரண்டு இந்திய ஆட்டக்காரர்களோடு முதலாளிகள் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அவர்கள் களத்தில் மட்டையுடன் எவ்வளவு நேரம் இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களின் ஊதியம் அதிகரிக்குமாம். இந்தப் பச்சையான மோசடியை விரித்துப் புரிந்து கொள்ளவேண்டும்.

அடித்து ஆடவேண்டிய கடைசி 10 ஓவர்களின்போது இவர்கள் களத்திலிருந்தால் என்ன ஆகும்? அடித்து ஆடமாட்டார்கள். கட்டை போடுவதிலேயே குறியாயிருப்பார்கள். பந்துவீச்சைக் கவனிப்பதை விட தனது மட்டையிலிருக்கும் நிறுவன முத்திரைகளை கேமராவுக்கு காண்பிப்பதிலேயே கருத்தாயிருப்பார்கள். ஆக, களத்துக்கு வெளியே மட்டுமல்ல, உள்ளேயும் வீரர்கள் விளம்பரத்துக்காக நடித்துக் கொண்டிருக்க, இரசிகர்களோ அவர்கள் கிரிக்கெட் ஆடுவதாக முட்டாள்தனமாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்த அதிர்ச்சியான செய்தி என்னவென்றால் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் அனைவரும் ஒரு ஆண்டில் விளம்பரப் படப்பிடிப்புக்கு மட்டும் 75 நாட்கள் செலவழிக்கிறார்கள். இதன்படி 365 நாட்களில் பந்தய நாட்களை விட, பந்தயத்திற்காகப் பயிற்சி பெறும் நாட்களை விட நடிக்கும் நாட்களே அதிகம் என்றாகிறது. நடிகர்கள் எப்படி கிரிக்கெட் ஆட முடியும்?

இந்த நடிகர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் கிரிக்கெட் வைத்துச் சம்பாதிப்பதை நிறுத்துவதில்லை. உலகக் கோப்பைக் கிரிக்கெட் குறித்து இந்திய ஆங்கில-இந்தி செய்தித் தொலைக்காட்சிகளில் அரட்டையடிப்பதற்காக முன்னாள் ஆட்டக்காரர்களுக்கான ஊதியத்



படிப்பகம்

www.padippakam.com

தைப் பாருங்கள், கபில்தேவுக்கு 2 கோடி, சித்துவுக்கு 1.5 கோடி, அமர்நாத்துக்கு 60 இலட்சம். இப்படி ஒவ்வொரு பந்தயத்திற்கும் தனிக்கட்டணம். அப்புறம் பத்திரிக்கைகளுக்கு எழுதுவதில், போட்டிகளில் நடுவராகப் புணியுாற்றுவது, வீரர்களுக்குப் பயிற்சி கொடுப்பது என்று கிரிக்கெட் அட்சய பாத்திரம் வற்றாமல் அள்ளிக் கொடுக்கிறது.

எனவே அணிக்குத் தேர்வு செய்யப்படும் வீரர்கள் ஒரு சில போட்டிகளில் நூறு அடித்துவிட்டு 25 வயதிற்குள் நட்சத்திர வீரராகிவிட வேண்டியது. நட்சத்திரமானதும் பன்னாட்டு நிறுவனங்கள் விளம்பர நாயகர்களாக மாற்றிவிடும். அப்புறம் இவர்களின் கிரிக்கெட் வாழ்வின் பாதுகாப்பை முதலாளிகளே பார்த்துக் கொள்வார்கள். ஊடகங்களும்இந்த நாயகத்தனத்தை ஊதிப் பெருக்குவார்கள். பிறகு இவர்களின் ஆதிக்கம் அணியில் தொடரும். அணியிலும் கோடிகோடியாய்ச் சம்பாதிப்பவர்கள், அப்படிச் சம்பாதிக்க வக்கற்றவர்கள் என்று ஏற்றத்தாழ்வு வரும்.

விளையாட்டில் தேர்ச்சி பெறுவதைவிட இந்த நட்சத்திரப் பாதையில் வெற்றி பெறுவது எப்படி என்பதே வீரர்களுக்கு கனவாய் இருக்கும். முன்னணி வீரர்களை விளம்பரத் தூதர்களாக வைத்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்கள்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியங்களுக்கும் புரவலர்களாக இருக்கின்றன. அதனால் வாரியங்களும் விளையாட்டில் திறமை பெற்றவர்களைக் கண்டுபிடித்துச் சேர்ப்பதற்குப் பதில் நிறுவனங்களின் நட்சத்திர வீரர்களைத் தக்க வைப்பதிலேயே கருத்தாயிருக்கின்றன. இந்திய அணியிலிருக்கும் மூத்த வீரர்கள் மாஃபியாக்கள் போல ஆதிக்கம் செய்வதாக பயிற்சியாளர் கிரேக் சாப்பலே கூறியிருக்கிறார். ஆக வர்த்தகச் சூதாடிகளின் விளையாட்டாக மாறி விட்ட கிரிக்கெட்டில் 'விளையாட்டு' எப்படி இருக்க முடியும்?

இந்திய அணியை வங்கதேசமும், இலங்கையும் தோற்கடிப்பதற்கு முன்னரே விஷ மரமாக வளர்ந்துவிட்ட வணிக ஆதிக்கம் அதனைத் தோற்கடித்து விட்டது. வெறியேற்றப்பட்ட இரசிகர்களோ உலகக் கோப்பையிலிருந்து இந்தியா வெளியேற்றப்பட்டதும், ஆற்றாமை தீர துக்கம் அனுசரித்தார்கள்.

உலகமயத்தின் பெயரால் வாழ்வு சூறையாடப்படும் போதெல்லாம் சுரணையற்றுக் கிடக்கும் தேசத்தின் மனசாட்சி, கிரிக்கெட்டின் தோல்விக்காகச் சிலிர்த்தெழுந்தது. இந்த நொறுக்குத் தீனி தேசபக்தியின் இரசிகர்கள் இந்திய அணியின் வெற்றிக்காக யாகம் வளர்த்தவர்கள், வீரர்களின் படங்களை எரித்தார்கள். வீரர்களுக்குப் பூஜை செய்து ஆராதித்தவர்கள், வீரர்களின் உருவ பொம்மைகளுக்குப் பாடைகட்டி ஈமச் சடங்கு செய்தார்கள். வீரர்களின் தரிசனத்திற்குத் தவம் கிடந்தவர்கள் வீரர்களின் வீடுகள் முன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.




ஆயினும் செயற்கையாகத் தூக்கி விடப்பட்ட இந்த கிரிக்கெட் தேசபக்தி வெறி வேறுவழியின்றி இயற்கையாக ஒரு சில நாட்களில் வடிந்துவிட்டது. இரசிகர்களும் அவரவர்கள் வேலையைப் பார்க்கப் போய்விட்டார்கள்.

இந்த உணர்ச்சி அலையின் சூத்திரதாரிகளான பன்னாட்டு நிறுவனங்களால் அப்படி இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை. இந்தியா குறைந்தபட்சம் சூப்பர்-8 பிரிவுக்காவது தகுதி பெற்று பின் அரை இறுதிக்குச் சென்றுவிடும், இந்த நாட்களில் விளம்பரங்கள் மூலம் பொருட்களை விற்றுக் கல்லா கட்டலாம் என்று மனக்கோட்டை கட்டியவர்கள் இன்று பொறி கலங்கிக் கிடக்கிறார்கள். கிரிக்கெட்டுக்காகப் போடப்பட்ட கோடிக்கணக்கான முதலீடு அத்தனையும் வீண். இந்த ஒரு விசயத்திற்காகவே நாம் இந்தியாவின் தோல்வியை மனதாரக் கொண்டாடலாம்.

1975-ஆம் ஆண்டு கிளைவ் லாயிடு தலைமையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி உலகக் கோப்பையை வென்றபோது அளிக்கப்பட்ட பரிசுத் தொகை ரூ. 4 இலட்சம். 2007-இல் பரிசுத்தொகை ரூ. 10 கோடி. இந்த 200 மடங்கு வளர்ச்சி எப்படிச் சாத்தியமானது?

இத்தனைக்கும் கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் எண்ணிக்கை இந்த 32 ஆண்டுகளில் கூடிவிடவில்லை. இங்கிலாந்தின் காலனிய நாடுகளில் மட்டும்தான் கிரிக்கெட் பிரபலம். அதிலும் இந்தியத் துணைக்கண்டத்தைத் தவிர மற்ற நாடுகளில் கிரிக்கெட் மோகம் குறிப்பிடத்தக்க அளவில் வளரவில்லை. ஆனால் உலகமயத்தின் தயவால் இந்தியாவில் குதித்த பன்னாட்டு நிறுவனங்கள் கிரிக்கெட்டின் உதவியால் தங்களது சந்தையை விரிவுபடுத்த முடியும் என்று கண்டு கொண்டன. அதனால்தான் இந்த வளர்ச்சி.

ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் வருவாயில் 75% பங்கை இந்தியச் சந்தையில் கடை விரித்திருக்கும் பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளித்துவ நிறுவனங்களுமே அளிக்கின்றன. உலகில் கிரிக்கெட் உயிர்த்திருப்பதன் பொருளாதாரக் காரணமே இந்தியச் சந்தைதான். இதன் பொருள் இந்திய மக்களைச் சுரண்டுவதற்காக கிரிக்கெட் மோகம் திட்டமிட்டுப் பரப்பப்படுகிறது என்பதே. இந்த உலகக்கோப்பைப் போட்டிக்காக

www.padippakam.com

பெப்சியும், எல்.ஜி.யும் தலா 315 கோடி ரூபாயையும், ஹீரோ ஹோண்டா 180 கோடியும், ஹட்ச் நிறுவனம் 90 கோடிகளையும் ஐ.சி.சிக்கு ஸ்பான்சர் தொகையாக அளித்திருக்கின்றன. மேற்கிந்தியத் தீவுகளின் மைதானங்களை இந்த நிறுவனங்களின் பெயர்கள்தான் ஆக்கிரமித்திருந்தன.

போட்டியை ஒட்டி இந்திய ஊடகங்களில் விளம்பரங்கள் செய்வதற்கான தயாரிப்பு மற்றும் ஒளிபரப்புச் செலவு மட்டும் 1000 கோடி ரூபாய்களாகும். இது போக போட்டியை வைத்து பல நிறுவனங்களும் தத்தமது பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக மட்டும் 800 கோடி ரூபாய்களை முதலீடு செய்தன. உலகக் கோப்பையை அதிகாரபூர்வமாக ஒளிபரப்பும் உரிமையை சோனி நிறுவனம் 1100 கோடிகள் செலுத்திப் பெற்றிருந்தது.

ஆக, இத்தனை ஆயிரம் கோடிகளும் ஏதோ முதலாளிகள் தங்கள் சட்டைப் பையிலிருந்து தர்மகாரியம் செய்வதற்காகச் செலவழிக்கிறார்கள் என்பதல்ல. இரசிகர்கள் தொலைக்காட்சியில் பந்தயத்தைப் பார்க்கும்போது அவர்களுக்குத் தெரியாமல் திருடப்படும் பணம்தான் இது. இந்த மோடி மஸ்தான் கொள்ளைக்கு ஒரே ஒரு நிபந்தனை இரசிகர்கள் பந்தயத்தை தொடர்ந்து பார்க்க வேண்டும் என்பதே.

இந்தியாவில் 28 கோடிப் பேர் கிரிக்கெட்டை பார்ப்பார்கள் என்று கணக்கிட்டிருந்தார்கள். ஆனால் இந்திய அணி தோல்வியடைந்ததும் இந்தக் கணக்கு அதோகதியானது. முதலாளிகள் எவ்வளவு வேகத்தில் கிரிக்கெட் பரபரப்பை எழுப்பியிருந்தார்களோ அதைவிட அதிகவேகத்தில் அந்த அலை சரிந்து போனது. வாலறுந்த நரி போல நிறுவனங்கள் ஊளையிடுகின்றன.

பெப்சி ப்ளூ பில்லியன் என்ற பெயரில் இந்திய அணி வீரர்களை வைத்து ஹாலிவுட் திரைப்படம் போல எடுத்த விளம்பரப்படம், இந்திய அணி தோல்விக்குப் பிறகு நிறுத்தப்பட்டது. மேலும் இந்திய அணி தங்கக் கோப்பையை வென்று வருவதாக நம்பி தங்கநிற கோலாவையும் பெப்சி இறக்கியது. தற்போது அவற்றை கூவத்தில் ஊற்றிவிட்டார்களா, தெரியவில்லை.

இந்திய அணியின் சீருடையில் கிரிக்கெட் உபகரணங்களை விற்கத் திட்டமிட்டிருந்த நைக் நிறுவனம் தற்போது அவற்றை என்ன செய்வதென்று தெரியாமல் விழித்து வருகிறது. சாம்சங், எல்.ஜி, வீடியோகான் போன்ற நிறுவனங்கள் பழைய டி.வி.க்களை மாற்றி விட்டு உலகக் கோப்பையை அகன்ற பிளாஸ்மா, எல்.சி.டி டி.வி.க்களில் பார்க்குமாறு விளம்பரம் செய்து இலட்சக்கணக்கில் விற்கத் திட்டமிட்டிருந்தன. சூடுபட்ட வீடியோகோனின் தலைவர் வேணுகோபால் இனிமேல் கிரிக்கெட்டில் முதலீடு செய்வதில் கவனமாயிருப்போம் என்கிறார்.

போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையைப் பெற்றிருந்த சோனி நிறுவனம் விளம்பரங்களின் மூலம் பிரம்மாண்டமாய் வசூலிக்கத் திட்டமிட்டிருந்தது. ஓவருக்கிடையில் வீரர்கள் குனிந்து நிமிர்ந்தால், அவுட்டானால், போட்டி நடப்பதற்கு முன்னும் பின்னும் என ஆயிரம் வழிகளில் விளம்பரம். 10 விநாடிகளுக்கு 2 இலட்சம், 30 விநாடிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் என 50% விளம்பர நேரத்தை விற்றுவிட்டு, இந்தியா சூப்பர் 8-க்குத் தேர்வானதும் மீதி 50% விளம்பரங்களை 30 விநாடிகளுக்கு 8 இலட்சம் என வசூலிக்க சோனி நிறுவனம் முடிவு செய்திருந்தது.

இந்தியா தோல்வியுற்றதும் போட்ட காசைக்கூட எடுக்க முடியவில்லையே என சோனி முதலாளிகள் புலம்புகின்றனர். விளம்பரம் கொடுத்த மற்ற முதலாளிகளோ கட்டணத்தை மலிவு விலைக்குக் குறைக்குமாறு வற்புறுத்துகின்றனர். சோனி மறுத்து வருகிறது. முதலாளிகளுக்கிடையில் நடக்கும் இந்தச் சண்டையில் ஒரு உண்மை வெளிவந்து விட்டது.

சோனியின் தலைமை நிர்வாகி குனல் தாஸ்குப்தா, "கேசினோவில் பணம் கட்டிச் சூதாடுபவர்கள் தோற்று விட்டால் பணத்தைத் திரும்பத் தருமாறு கோர முடியுமா? அது போல இந்தியா வெற்றிபெறும் என்று நம்பி விளம்பரக்கட்டணம் செலுத்தியவர்கள் தற்போது இந்தியா தோல்வியுற்றதும் தங்கள் கட்டணத்தைத் திரும்பக் கோருவது முறையல்ல" என்று பச்சையாக குட்டை உடைத்து விட்டார். தேசபக்தி, விளையாட்டு உணர்வு என்ற பசப்பல்களை யெல்லாம் ஒதுக்கி விட்டு இது ஒரு சூதாட்டம்தான் என்பதைப் பன்னாட்டு நிறுவனங்களே ஒப்புக் கொண்டு விட்டன.

இது சட்டபூர்வச் சூதாடிகளின் கதை. இந்த உலகக்கோப்பையை ஒட்டி நடைபெற்ற சட்ட விரோதச் சூதாட்டத்தில் மட்டும் 2000 கோடி ரூபாய் புழங்கியதாம். ஒருவேளை இந்தியாவும் பாகிஸ்தானும் இறுதிப் போட்டிக்கு வந்திருந்தால் அந்த ஒரு போட்டியில் மட்டும் 1350 கோடி ரூபாய் சூதாடப்பட்டிருக்குமாம். இதில் ஒரு நூறு கோடி ரூபாயை வீரர்களுக்கு வீசியெறிந்தால் அவர்கள் ஆட்டத்தைத் தூக்கி எறிந்திருக்க மாட்டார்களா என்ன?

இத்தனைக் கோடிப்பணம் சட்ட விரோதமாகப் புழங்குவதைக் கண்டு கண்ணீர் விடும் இந்தியா டுடே பத்திரிக்கை முதலாளிகள் இந்தச் சூதாட்டத்தை சட்டபூர்வமாகவே அங்கீகரித்து விடலாமே என்று கோருகிறார்கள். அங்கீகரித்தாலும் அங்கீகரிப்பார்கள்! சூதாட்டப் பிரச்சினைக்காக பாகிஸ்தான் பயிற்சியாளர் பாப் உல்மர் கொலை செய்யப்பட்டது உலகக் கோப்பைக் கிரிக்கெட்டின் யோக்கியதைக்கு




**உலகக்கோப்பையை இந்தியா வெல்லுவது போல் அவுட்லுக் ஏடு வெளியிட்டிருக்கும் கற்பனை. ஊடகங்கள் வெறியேற்றிய பரபரப்புத் தீனி!**



படிப்பகம்

www.padippakam.com

எடுத்துக்காட்டு! உலகக் கோப்பை ஆட்டங்கள் முடிவதற்கு முன் குற்றவாளியே நேரில் ஆஜராகி நான்தான் கொலை செய்தேன் என்று ஒப்புக் கொண்டாலும் இந்தப் புலன் விசாரணை முடிவுக்கு வராது. உண்மை வெளிவராமலேயே போவதற்கான வாய்ப்புக்களையும் மறுப்பதற்கில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை தற்போது கிரிக்கெட் காய்ச்சல் அடங்கி விட்டது. இருப்பினும் போட்ட காசை எடுப்பதற்காக ஊடகங்கள் இன்னமும் கிரிக்கெட் குறித்த அற்ப விசயங்களை ஊதிப் பெரிதாக்குகின்றன. தோல்விக்குப் பிறகு காப்டன் மாற்றமா, பயிற்சியாளர் மாற்றமா, அடுத்த காப்டன் டெண்டுல்கரா, வாரியத்தின் அவசரக் கூட்டம், அதில் முக்கிய முடிவுகள், டெண்டுல்கர் மீது சாப்பல் விமரிசனம், அதற்கு டெண்டுல்கர் விளக்கம் என்று தினம் ஒரு செய்தி பரபரப்பாக ஊடகங்களால் உருவாக்கப்பட்டன. எப்படியும் கிரிக்கெட் கிளர்ச்சியைத் தணியவிடக் கூடாது என்பது அவர்களது நோக்கம். தயாரிக்கப்பட்ட விளம்பரங்கள் ஒன்றுமில்லாமல் விரயமாகக்கூடாதல்லவா!

ஆயிரக்கணக்கில் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகள் பிரச்சினையைப் பார்ப்பதற்கு நேரமற்ற விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் கீழே விழுந்துவிட்ட கிரிக்கெட் மோகத்தை எழுப்புவதற்கு பலநாட்களைச் செலவிட்டார். இவர்தான் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் எனப்படும் பி.சி.சி.ஐ.இன் தலைவர். ஊடகங்களும் இவரை எப்போதும் வேளாண்துறை அமைச்சராகக் கருதாமல் கிரிக்கெட் பிரச்சினைகளுக்காக மட்டும் இவரிடம் பேட்டி எடுக்கின்றன.

மறுபுறம் இரசிகர்களின் கோபத்தைத் தணிப்பதற்காக பி.சி.சி.ஐ. சில யோசனைகளைத் தெரிவித்தது. இதன்படி இனி ஒவ்வொரு வீரரும் இரண்டு நிறுவனங்களுக்கு மேல் விளம்பரங்களுக்காக நடிக்கக் கூடாது, பந்தயத்திற்கு முந்தைய 15 நாட்களில் விளம்பரப் படப்பிடிப்புகளில் கலந்து கொள்ளக்கூடாது, வீரர்களை பிராந்திய முறையில் தெரிவு செய்யப்படும் முறை ரத்து செய்யப்படும். போட்டிகளில் வெல்லுவதற்கேற்ப ஊதியம் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும் என்று போகிறது அந்த ஆலோசனைப் பட்டியல். இவையெல்லாம் வெறும் யோசனைகள் என்பதுதான் முக்கியம்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர்களும், பன்னாட்டு நிறுவனங்களும் இந்த ஆலோசனைகளை உடனே கடுமையாக எதிர்த்தனர். பி.சி.சி.ஐ.யும் இவையெல்லாம் சும்மா ஒரு பேச்சுக்காகச் சொன்னது என்று தனது முன்மொழிதலிலிருந்து பின்வாங்கி விட்டது. ஏனெனில் கிரிக்கெட்டைக் கட்டுப்படுத்துவது வாரியமல்ல, பன்னாட்டு நிறுவனங்கள்தான். வாரியத்திற்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை வருமானமாகக் கொடுப்பது முதலாளிகள்தான். எனவே அவர்களைப் பகைத்துக் கொண்டு எந்த ஆலோசனைகளையும் அமல்படுத்த முடியாது. இரண்டு நிறுவனங்களுக்கு மேல் விளம்பர நடிகராக இருக்க முடியாது எனும்போது, வாரியத்திற்கு ஸ்பான்சர் தொகையை வழங்க முடியாது என்று நிறுவனங்கள் அறிவித்து விட்டால் என்ன ஆகும்?



"முன்பு போட்டிகளில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்க சூதாட்டக்காரர்கள் முயன்றார்கள்; தற்போது அதைப் பன்னாட்டு நிறுவனங்களே செய்யக்கூடும். ஏனெனில் கிரிக்கெட்டினால் சூதாடிகள் பெறும் இலாபத்தைவிட பன்னாட்டு நிறுவனங்கள் அடையும் இலாபம் பன்மடங்கு அதிகம்.'

அதேபோல பிராந்திய முறை தேர்வு ரத்து என்று பி.சி.சி.ஐ. அறிவித்தாலும் வீரர்களின் தேர்வு என்பது சுயேச்சையாக நடக்க முடியாது. விளம்பரங்களில் நடிக்கும் நட்சத்திர வீரர் ஒருவர் சரியாக ஆடவில்லை என்றாலும் அவரை வாரியம் நீக்க முடியாது என்பதே உண்மை. அவரை அணியிலிருந்து எடுப்பதற்கு அவரை விளம்பரத்திற்குப் பயன்படுத்தும் நிறுவனங்கள் சம்மதிக்காது என்பதுதான் யதார்த்தம். எனவே வீரர்களைத் தேர்வு செய்வதும், நீக்குவதும் நிறுவனங்களின் தயவைப் பொறுத்ததுதான். மற்ற நாட்டு அணிகளில் வீரர்கள் திறமையினால் இடம்பெறும் நிலை இந்தியாவில் இல்லை. இனி எப்போதும் இந்திய அணி கிரிக்கெட் விளையாட்டில் முன்னேற முடியாது என்பதற்கு இதைவிட என்ன ஆதாரம் வேண்டும்?

ஆயினும் இந்திய அணி வெற்றி பெறுவது நிறுவனங்களுக்கு அவசியம் என்பதால் அதற்கேற்ற வகையில் கிரிக்கெட் விளையாட்டையே மாற்றியமைக்கவும் அவர்கள் தயங்க மாட்டார்கள். இந்திய அணி வெற்றி பெறுவதற்கேற்ப ஆடுகளங்கள் தயாரிக்கப்படலாம். இந்திய அணி இறுதிப் போட்டிகளுக்குச் செல்லும் வகையில் பந்தய விதிகளையே வடிவமைக்கலாம். இந்திய அணியை வெற்றிபெறச் செய்ய மற்ற அணிகளைப் பணம் கொடுத்து வாங்கும் வேலையைப் பன்னாட்டு நிறுவனங்களே செய்யலாம். திறமையுள்ள ஒரு சில வெளிநாட்டு வீரர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கி அணியை வலுப்படுத்தலாம் என்று கூட இவர்கள் திட்டமிடலாம். எது வேண்டுமானாலும் நடக்கலாம்.


முன்பு போட்டிகளில் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்க சூதாட்டக்காரர்கள் முயன்றார்கள்; தற்போது அதை பன்னாட்டு நிறுவனங்களே செய்யக்கூடும். ஏனெனில், கிரிக்கெட்டினால் சூதாடிகள் பெறும் இலாபத்தைவிட பன்னாட்டு நிறுவனங்கள் அடையும் இலாபம் பன்மடங்கு அதிகம்.

பன்னாட்டு நிறுவனங்களுக்கு நட்சத்திரங்கள் வேண்டும். அத்தகைய நட்சத்திர வீரர்களை உலகம் முழுவதிலிருந்தும் பொறுக்கி எடுத்து ஐரோப்பியக் கால்பந்து கிளப்புகளைப் போல கிரிக்கெட் கிளப்புகளை உருவாக்கவிருப்பதாக அறிவித்திருக்கிறார் ஜீ டி.வியின் முதலாளி. தேசவெறிக்கே கிரிக்கெட் ரசனை என்ற முகமூடி அணிவித்து அதனைத் தூண்டி வளர்த்த முதலாளிகள் இப்போது குழப்பத்தில் இருக்கிறார்கள்.

மூவர்ணக் கொடியை அணியாத இந்த கிளப் நட்சத்திரங்களை ரசிகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அமெரிக்க முதலாளிகள் இங்கே தொழில் தொடங்குவதை இந்தியாவின் முன்னேற்றம் என்று மக்களை நம்ப வைக்க முடிகிறது; ஆனால், ஆஸ்திரேலிய ஆட்டக்காரரை இந்திய வீரர் என்று கொண்டாடும் மனப்பக்குவத்தை இந்திய ரசிகர்களுக்கு உருவாக்க முடியுமா? தேசிய உணர்வையே சரக்காக்கி விற்றார்கள் பன்னாட்டு முதலாளிகள்; இப்போது அந்தச் சரக்கை விற்கவும் முடியவில்லை, அழிக்கவும் முடியவில்லை.

● இளநம்பி

www.padippakam.com



# நிலவில் இந்தியன்: வல்லரசுக் கனவுக்கு வெட்டிச் செலவு!

ஆண்டுக்கொருமுறை நடக்கும் கோவில் திருவிழாக்களில் மூத்தாய்ப்பான இறுதி நிகழ்ச்சி வாணவேடிக்கை. சாதிப்பற்றைப் போல ஊர் அபிமானத்தையும் வரித்திருக்கும் நாட்டுப்புறமக்கள் எந்த ஊர் அதிகம் செலவு செய்கிறது என்று போட்டி போட்டுக் கொண்டு வாணவேடிக்கையை நடத்துவார்கள். கஞ்சிக்கு வழியில்லாத இடங்களில் கூட இந்த வேடிக்கைக்கான வசூல் மும்முரமாக நடக்கும். ஏழைகள் என்பதால் வறட்டு ஜம்பம் குறைந்து விடுகிறதா என்ன? அறியாப் பாமர மக்களை விடுங்கள். அறிவாளிகளின் கூடாரமான இந்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ரோவும் ஆண்டுக்கொரு முறை வாணவேடிக்கையை நடத்துகிறது. இஸ்ரோவின் ஓராண்டுச் செலவு ரூபாய் 4000 கோடி.

இவ்வாண்டு ஜனவரி 10-ஆம் தேதி இஸ்ரோ பி.எஸ்.எல்.வி. ஏவுகணை மூலம் 2 வெளிநாட்டு சோதனை விண்கோள்களையும், இரண்டு உள்நாட்டு விண்கோள்களையும் ஏவியது. அதில் எஸ்.ஆர்.வி.1 என்ற விண்கோள் விண்வெளியில் 12 நாட்கள் சுற்றிய பிறகு வங்காள விரிகுடாவில் இறக்கப்பட்டது. ஒரு செயற்கைக்கோளை விண்வெளிக்கு அனுப்பி அதையே மீட்டுக் கொண்டு வருவது என்பது ஒரு இமாலய வெற்றியாம். பல தொழில்நுட்பத் தடைகளைத் தாண்டி இச்சாதனையை நிறைவேற்றியதாக இஸ்ரோவின் அறிவியலாளர்கள் பெருமைப்படுகிறார்கள்.

அமெரிக்கா இந்தச் சோதனையில் 12 முறை தோல்வியடைந்து 13-ஆவது முயற்சியில் வெற்றியடைந்ததாம். இந்தியாவோ முதல் சோதனையிலே வென்றுவிட்டதாம். ஆனால் அமெரிக்காவின் சோதனைகள் தோல்வியடைந்தது 1960-ஆம் ஆண்டு. இந்தியா அடைந்த வெற்றியின் பின்னே 47 ஆண்டுகள் இடைவெளி இருப் பது போகட்டும். இஸ்ரோவின் அறிவியலாளர்கள் ஒரு அறிவியாளன் என்ற முறையில் அறிவியல் பரிசோதனைகளை நிகழ்த்தி — மிகுந்த செலவு பிடிக்கும் சோதனை என்றாலும் — சொந்த முயற்சியில் வெற்றி பெற்றிருப்பதை நாமும் பாராட்டுவோம். ஆயினும் இந்த வெற்றியினால் என்ன பயன்?

விண்வெளிக்கு ஒரு இந்தியனை அனுப்புவதற்கு இந்த வெற்றி ஒரு மைல் கல்லாம். அடுத்த ஆண்டு இஸ்ரோ 400 கோடி ரூபாய் செலவில் சந்திராயன் எனும் விண்கோளை நிலவுக்கு அனுப்பப் போகிறதாம். இன்னும் பத்தாண்டுகளில் நிலவுக்கு ஒரு இந்தியனை அனுப்ப முடியுமாம். இதற்கான உத்தேச செலவு மதிப்பீடு 10000 கோடி ரூபாய். இதற்கான மறைமுக நிறுவனச் செலவு இன்னும் சில ஆயிரம் கோடிகளைக் குடிக்கும்.

மூன்று டன் எடை கொண்ட விண்கோள், அதில் விண்வெளி வீரர்களுக்கான அறை, சேவை அறை, அவசர நிலை அறை போன்றவற்றை இந்தியா முழுவதும் உள்ள இஸ்ரோவின் ஆராய்ச்சி நிலையங்களில் கட்டவேண்டும். மேலும் உயர் அழுத்த அதிர்வைச் சமாளிப்பதற்கான பயிற்சி, வீரர்களின் உடைகள், பாதுகாப்பு முறைகள், உடல் நலக் கண்காணிப்பு, உயிர்காக்கும் கருவிகள் முதலியனவற்றில் வீரர்கள் நிபுணத்துவம் பெறவேண்டும். ஒரு இந்தியனை நிலவுக்கு அனுப்பி பத்திரமாக உயிரோடு மீட்டுக் கொண்டு வர இத்தனை 'பகீரதப் பிரயத்தனங்கள்' செய்தாக வேண்டும்.

> **பூமியில் இருக்கும் பல கோடி இந்தியர்களை மரணக்குழியில் தள்ளிவரும் அரசு, ஒரே ஒரு இந்தியனை நிலவுக்கு அனுப்பி வாணவேடிக்கை நடத்துவதற்கு பல ஆயிரம் கோடிகளைச் செலவழிக்கிறது. இதுதான் வல்லரசு ஜம்பம்!**

பூமியில் இருக்கும் பல கோடி இந்தியர்களை மரணக் குழியில் தள்ளி வரும் அரசு, ஒரே ஒரு இந்தியனை நிலவுக்கு அனுப்பி வாணவேடிக்கை நடத்துவதற்கு பல ஆயிரம் கோடிகளைச் செலவழிக்கிறது. இதுதான் வல்லரசு ஜம்பம். முதலாளிகளுக்கு இலாபம் தரும் திட்டங்களைத் தவிர வேறு எந்த மக்கள் நலத்திட்டமாக இருந்தாலும் அதனை வீண்செலவு என்று சாடும் இந்தியா டுடே போன்ற பிரச்சார பீரங்கிகள், இந்த வல்லரசு ஜம்பத்தை மட்டும் ஊதிவிடத் தவறுவதில்லை.

போதாக்குறைக்கு நமது அரசவைக் கோமாளி அப்துல் கலாம் வேறு ஊர் ஊராய்ச் சென்று ஏதுமறியாத பள்ளிக் குழந்தைகளிடம், "குழந்தைகளே கனவு காணுங்கள், 2020-இல் இந்தியா வல்லரசாகப் போகிறது, நிலவுக்கு இந்தியனை அனுப்பப் போகிறோம்" என்று சாமியாடி வருகிறார்.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்குப் பின்னே மறைந்திருக்கும் உண்மை என்ன? விண்வெளிக்கு இந்தியனை அனுப்புவதால் நயாபைசாவுக்குக் கூட பயனில்லை. நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல. அறிவியல் ரீதியாகக்கூட இதற்கு எந்தப் பயனும் இல்லை என்பதே உண்மை. நான் காசிக்குப் போயிருக்கிறேன், மெக்காவுக்குப் போயிருக்கிறேன் என்பது போல இந்தியனை நிலவுக்கு அனுப்பி விட்டோம் என்று வெட்டியாகப் பீற்றித் திரியலாம், அவ்வளவுதான்.

இப்படித்தான் 1960-களில் அமெரிக்காவும், ரசியாவும் கெடுபிடிப் போருக்காக விண்வெளி ஆராய்ச்சி என்ற பெயரில் பல்லாயிரம் கோடிகளை விரயமாக்கின. யார் முதலில் விண்வெளிக்கு மனிதனை அனுப்புவது என்ற போட்டியில் பல மனித உயிர்களும் விரயமாக்கப்பட்டன. இது அறிவியலின் பால் உள்ள காதலால் நடக்கவில்லை என்பதுதான் முக்கியம். ஏகாதிபத்திய உலகில் தூய அறிவியல் காதல் என்ற ஒன்று இருக்க முடியாதல்லவா!

சோவியத் யூனியனின் யூரி காகரின் விண்வெளிக்குச் சென்ற முதல் மனிதன் என்ற பெருமையைப் பெற்றார். ஆயினும் இதற்கு முன்னும் பின்னும் அரசுகளின் நிர்ப்பந்தம் காரணமாக திரும்பி வருவோம் என்ற உத்தரவாதமில்லாமல் இருநாட்டு வீரர்களும் உற்சாக



படிப்பகம்

www.padippakam.com

மின்றி மரணபயத்துடன் சென்றதை பி.பி.சி. ஆவணப்படம் ஒன்று தெரிவிக்கிறது. சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழிந்த சோவியத் யூனியன் இந்தப் போட்டியில் சிக்கித் தனது பொருளாதார வல்லமையை இழந்து திவால் ஆனது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா வருடத்திற்கு 70,000 கோடி ரூபாய்களை செலவழிக்கிறது. உலகைக் கொள்ளையடித்து உலையில் போட்ட இந்த ஆராய்ச்சியினால் என்ன பயன்? உலக மக்களை அச்சுறுத்தும் வண்ணம் நாசகார ஆயுதங்களை விண்ணில் சுற்றவிட்டதுதான் மிச்சம்.

70களில் அப்பல்லோ விண்கலத்தில் நிலவுக்கு வீரர்களை அனுப்பிய அமெரிக்கா, சோவியத் யூனியனை ஆயுதப் போட்டியில் வெல்வதற்காக தனது கவனத்தை நட்சத்திரப்போர் திட்டத்தின் மீது குவித்தது. இதன் செலவு மதிப்பீடு நினைத்துப் பார்க்க முடியாத் அளவு அதிகம். பின்பு ரசியா வீழ்ந்த பிறகு அந்தத் திட்டத்திற்கு அவசியமில்லாததால் அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தற்போது அதன் விண்வெளி ஆராய்ச்சி ஈராக்கிலும், ஆப்கானிலும் இலட்சக்கணக்கான அப்பாவி மக்களைக் கொல்வதற்குத்தான் சிறப்பாகப் பயன்பட்டு வருகிறது.

அதிலும் அமெரிக்க விண்கோள்களின் உதவியுடன் ஈராக்கின் இராணுவ இலக்குகளை மட்டும் தாக்குவதாகக் கூறி மக்கள் குடியிருப்பில் குண்டு போட்டதுதான் அதன் தொழில்நுட்ப வெற்றி! இது போக இந்த விண்வெளி ஆராய்ச்சி வித்தைகள் ஹாலிவுட் படங்களுக்கு திரைக்கதை உற்பத்தி செய்ய மட்டும்தான் பயன்பட்டு வருகின்றன. இந்த அறிவியல் மேதைகள்தான் புளோரிடா மாநிலத்தை காத்ரினா சூறாவளி பிய்த்தெறிந்தபோது, மக்களைக் காப்பாற்ற முடியாமல் திகைத்து நின்றார்கள்.

ரசியாவும் தற்போது பேருக்கு விண்வெளி ஆராய்ச்சியைத் தொடர்ந்து வருகிறது. அதற்குப் பணம் சேர்ப்பதற்காக தலைக்கு 90 கோடி ரூபாய் என்று கட்டணம் வைத்து கோடீசுவர முதலாளிகளை விண்வெளிச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்கிறது. ரசிய விண்வெளிச் சாதனையின் இலட்சணம் இதுதான். சுரண்டலுக்கும், நாசகார ஆயுதங்களுக்காகவும் மட்டுமின்றி முதலாளிகளின் கேளிக்கைக்கும் விண்வெளி அறிவியல் பயன்படும் என்பது இதில் உள்ள செய்தி.




இஸ்ரோ'வின் வான வேடிக்கையைத் துவக்கி வைக்கும் 'அரசவைக் கோமாளி' அப்துல் கலாம்

**"முதலாளிகளுக்கு இலாபம் தரும் திட்டங்களைத் தவிர வேறு எந்த மக்கள் நலத்திட்டமாக இருந்தாலும் அதனை வீண்செலவு என்று சாடும் இந்தியா டுடே போன்ற பிரச்சார பீரங்கிகள், இந்த வல்லரசு ஜம்பத்தை மட்டும் ஊதிவிடத் தவறுவதில்லை.'**

ஏகாதிபத்தியங்களின் இலாபவேட்டைக்காக மலிவான உழைப்பை விற்று கொத்தடிமைகளின் நாடாக மாறிவரும் சீனாவும் விண்வெளி ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தியில் 65 சதவீதத்தை தனியார் முதலாளிகளிடம் விட்டுக் கொடுத்திருக்கும் அதிகார வர்க்க முதலாளித்துவ நாடான சீனாவில் ஓராண்டில் நடக்கும் நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொல்லப்படுகிறார்கள்.

இதைத் தடுப்பதற்கு வக்கற்ற சீன அரசு 2003-இல் விண்வெளிக்கு ஒரு சீனவீரரை அனுப்பி இந்தச் சாதனையில் மூன்றாம் நாடாக மாறியிருக்கிறது. சீனாவும் நிலவுக்கு ஒரு வீரரை அனுப்பப் போகிறதாம். சீன கடற்கரைப் பெரு நகரங்களில் நடக்கும் பேஷன் ஷோக்களில் அழகிகள் வாத்து நடை நடக்க, சீன வீரர் நிலவில் அன்ன நடை நடக்கப் போகிறார். கிராமப்புறங்களில் இருந்து துரத்தப்படும் சீன விவசாயிகள் நகரங்களை நோக்கி நாடோடிகளாய் ஆடுகளைப் போல ஓடுகிறார்கள். நல்ல வளர்ச்சிதான்!

உலக நாடுகளின் வாணவேடிக்கைக் கதை இதுவாக இருக்க இந்தியா எதைச் சாதித்து விடப்போகிறது? நமது செயற்கைக்கோள்களால் சுனாமியின் அழிவை முன்னறிந்து சொல்ல முடிந்ததா? அந்த நேரத்தில் பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கங்களை முன்னறிந்து கூறப் பயன்படும் செயற்கைக் கோள்கள், பருவநிலை மாற்றத்தை முன்னறிவித்து விவசாயிகளுக்குப் பயன்பட்டதுண்டா? குடிநீரோ, கழிப்பிட வசதியோ, கல்வியறிவோ இன்றி கோடிக்கணக்கான மக்கள் வாழும் நாட்டில் நிலவுக்கு இந்தியனை அனுப்புவது என்பது ஆபாசமன்றி வேறென்ன?

• அஜித்

www.padippakam.com

# பருத்தி வீரன்: பொறுக்கித்தனத்தின் இரசனையா யதார்த்தத்தின் ருசி?

வசூலில் வெற்றியடைந்திருக்கும் பருத்தி வீரனை மண்வாசனை கமழும் கதை, அசலான பாத்திரங்கள், தெற்கத்தியப் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டும் காட்சிகள் என எல்லா அம்சங்களிலும் போற்றும் இரசிகர்கள் திரைப்படத்தின் இறுதியில் வரும் கற்பழிப்புக் காட்சி குறித்து மட்டும் வருத்தப்படுகிறார்கள்.

பின்கழுத்தில் கொக்கி குத்தியதால் இரத்தம் சிந்திச் சாகும் தறுவாயிலுள்ள முத்தழகை லாரி ஓட்டுநர்கள் கதறக் கதறக் கற்பழிக்கிறார்கள். எல்லாம் முடிந்த பிறகு வரும் பருத்தி வீரனிடம் இதுவரையிலும் அவன் செய்திருக்கும் பாவம் தான் தன் தலைமீது இறங்கியிருக்கிறது என்று கதறும் முத்தழகு, இந்த அசிங்கம் ஊருக்குத் தெரியாதவாறு தன்னைக் காணாப்பொணமாக்குமாறு கேட்டுக் கொண்டு கண்ணை மூடுகிறாள். நிலை குலைந்த பருத்திவீரனும் அவளைக் கண்டதுண்டமாக வெட்டி கவுரவத்தைக் காப்பாற்றுகிறான். தன்னையும் பலி கொடுக்கிறான்.

சென்டிமென்டால் போட்டுத் தாக்கும் இயக்குநரின் இந்த மலிவான உத்தியில் இரசிகர்களின் பிரச்சினை வேறு மாதிரி. முத்தழகு கூறுவது போல் அவர்கள் பருத்திவீரனின் முன்வினை அவளைச் சுட்டது என்று கருதவில்லை. ஜாலியான ஒரு காதல் ஜோடி சேர முடியாமல் இரக்கமின்றிப் பிரிக்கப்பட்டதே அவர்களின் கவலை. சித்தப்பா செவ்வாழையுடன் பருத்திவீரன் செய்யும் குடி, கூத்து, ஆட்டம், பாட்டத்தை அவர்கள் பாவமாகக் கருதவில்லை. சொல்லப்போனால் பார்வையாளர்கள், குறிப்பாக ஆண்கள், அந்தக் கேளிக்கைகளில் மனதளவில் கலந்து கொள்கிறார்கள். காட்சிக்கு ஒரு நகைச்சுவை என்று செதுக்கித் தீட்டப்பட்ட திரைக்கதை பொதுவில் கலகலப்பாகச் செல்கிறது. பருத்திவீரனது வக்கிரங்கள் எவையும் பொதுப்புத்திக்கு அதிர்ச்சி தராததோடு அவற்றை இரசிக்கும் வண்ணம் தரப்பட்டுள்ளது.

விபச்சாரி ஒருத்தியை அழைத்து வரும் லாரி ஓட்டுநர்களைக் கத்தியால் மிரட்டிவிட்டு அவளுடன் உறவு கொள்கிறான் பருத்தி வீரன். வெளியே காத்திருக்கும் ஓட்டுநர்கள் ''அண்ணே காசு குடுத்து கூட்டியாந்துட்டம்ணே, நாங்களும் கொஞ்சம் தொட்டுப் பாத்துக்கிறம்ணே, நீங்களும் யாரையாவது கூட்டிட்டு வந்தீகன்னா ஒன்னா புழங்கிக்கலாம்ணே'' என்கிறார்கள். இந்த வக்கிரத்தின் மீது அருவெறுப்பு கொள்ளுவதற்குப் பதில் இரசிகர்கள் பருத்தி வீரனோடு சேர்ந்து சிரிக்கிறார்கள். ஒரு வேளை அந்தப் புழக்கத்தில் அவர்களும் பங்கு கொள்ள விரும்பியிருக்கலாம். இந்தப் புழக்கத்திற்கு சித்தப்பா செவ்வாழை மட்டும் கவனமாக்த் தவிர்க்கப்படுகிறார். சித்தப்பனும் மகனும் மற்ற எல்லா விசயங்களிலும் ஒன்றாக சுற்றினாலும், ஒரே விபச்சாரியிடம் உறவு கொள்ளும் 'புரட்சியை' ஏற்குமளவுக்கு இரசிகர்கள் தயாராக வில்லை என்பதால் இயக்குநர் அதைத் தவிர்த்துவிட்டார் போலும்.

'ஒரு திரைப்படத்தின் நாயகன் விவசாயியாகவோ, தொழிலாளியாகவோதான் இருக்கவேண்டும் என்றில்லை. அவன் ஒரு நிலப்பிரபுவாகவோ, காமவெறி பிடித்த மிருகமாகவோ கூட இருக்கலாம். அவனுடைய வாழ்க்கையை இயக்குநர் எப்படிப் பார்க்கிறார், எப்படிப் பார்ப்பதற்கு இரசிகனைப் பழக்குகிறார் என்பதுதான் பிரச்சினை.'



ஒவ்வொரு முறையும் புதிது புதிதாகப் பிழைக்க முயலும் டக்ளசை இருவரும் ஏமாற்றுகிறார்கள், பணம் பறிக்கிறார்கள். இதிலும் ஒரு கிராமத்து அப்பாவியை இரக்கமின்றி பருத்தி வீரன் மோசடி செய்வதாக இரசிகர்கள் உணருவதில்லை. கவுண்டமணி பாணியிலான இந்தக் காமெடி பார்வையாளர்களைச் சிரிக்க வைப்பதற்கான அரதப் பழசான உத்தி. நிஜ வாழ்வில் அரட்டி, மிரட்டி, ஏமாற்றிப் பிழைக்கும் இத்தகைய பேர்வழிகளை மக்கள் வெறுக்கிறார்கள். படத்தில் இரசிக்கிறார்கள். யதார்த்தத்திற்காகப் போற்றப்படும் இந்தப் படத்தின் இலட்சணம் இதுதான்.

தன்னை சிறுவயதில் காப்பாற்றியவன் என்பதால் முத்தழகு வளர்ந்து ஆளானபிறகும், ஜாலியான பொறுக்கியாக வாழும் பருத்தி வீரனை துரத்தித் துரத்தி வம்படியாகக் காதலிக்கிறாள். ஆரம்பத்தில் பிகு செய்யும் பருத்தி வீரனும் பிறகு காதலிக்கிறான். நெஞ்சில் பச்சை குத்திக் கொள்கிறான். சாதியில் தந்தை வழியில் சேர்வையையும், தாய் வழியில் குறத்தியையும் கொண்டு கீழ்ச் சாதியில் பிறந்திருப்பதால் கதாநாயகியின் தந்தையும் பருத்தி வீரனின் மாமனுமான கழுவச்சேர்வை மகளின் காதலை வன்மம் கொண்டு எதிர்க்கிறார். அதனால் பருத்தி வீரனை கொலை செய்யவும் ஏற்பாடு செய்கிறார். இந்த முட்டாள்தனமான காதலும், எதிர்ப்பும் பல சினிமாக்களில் உருட்டப்படும் வழக்கமான சங்கதிதான்.

இப்படி எல்லாச் சினிமாத்தனங்களும் செயற்கையான பாத்திரப் படைப்பும் கொண்டு நகைச்சுவையின் உதவியுடன் நேர்த்தியாகப் பின்னப்பட்ட சராசரி மசாலாதான் பருத்தி வீரன். என்ன, இந்த மசாலாவில் வானுயர்ந்த கட்டிடங்கள், வழுக்கும் சாலைகள், கார்ணமடிக்கும் கார்கள், நூறு பேருடன் ஆடப்படும் குத்தாட்டம், வெளிநாட்டில் பாடப்படும் காதல் முதலான நகரத்து நெடி இல்லை. நகரத்து மசாலாவையே பார்த்துச் சலித்திருந்த கண்களுக்கு இந்தப் படம் சற்று நெகிழ்வைத் தருகிறது. ஆனாலும் இதுவும் ஒரு கிராமத்து மசாலா என்பதுதான் முக்கியம். ஆனால் சிறிய-பெரிய பத்திரிக்கை அறிவாளிகள்தான் இந்தப் படம் தமிழ் கிராம வாழ்வின் யதார்த்தத்தைச் சித்திரிப்பதாகக் கொண்டாடுகிறார்கள்.

இந்த யதார்த்தம் போலியானது. படத்தில் வழக்கு மொழி, உடலசைவு, காட்சிக்களன்கள், நாட்டுப்புறக் கலைகளில் மண்வாசனை அடித்தாலும், கதையில், கதை சித்தரிக்கும் வாழ்வில்


படிப்பகம்

www.padippakam.com

உண்மையான கிராமம் இல்லை. உண்மையான கிராமம் இங்கே கேலி செய்யப்படுகிறது. தேவர் சாதியினர் ஆதிக்கம் செய்யும் கிராமத்தில் குறத்திப் பெண்ணொருத்தி சாராயம் காய்ச்சி தாதா ராச்சியம் செய்கிறாள். தொழிலில் போட்டிக்கு வரும் ஆதிக்கசாதி நபர்களை தனியாளாய் நின்று கொலையும் செய்கிறாள். இத்தகைய கிராமத்தை எங்காவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மேல்சாதியினரால் நிறுத்தப்பட்டு வெற்றியடையும் தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் அற்ப விசயங்களுக்காகக் கொலை செய்யப்படும் நாட்டில் இப்படி ஒரு சினிமாக் கற்பனை.

சாதியில் கீழான பருத்திவீரனைக் காதலிக்கும் முத்தழகு அதை இரகசியம் காக்காமல் ஊரறிய, பெற்றோரறிய செய்கிறாள், சண்டை போடுகிறாள். வம்படியாகப் பேசும் கிராமத்து மேல் சாதிப் பெண்களைப் பார்த்திருக்கிறோம். அந்தப் பெண்கள்கூட, கீழ்ச்சாதி யென்ன, சமமான மற்ற சாதி ஆண்களைக் காதலிப்பதாக இருந்தால் கூட அதை ஊரறியச் செய்ய முடியாது. கலப்புமணம் புரிவதால் கட்டியெரிக்கப்படும் மண்ணில் அதைப் பயந்து பயந்து யாருமறியாமல்தான் செய்ய முடியும்.

ஆக, படத்தில் ஆதிக்க சாதி, அடக்கப்படும் சாதி குறித்த பிரச்சினைகளை நுனிப்புல் அளவுக்குக் கூட பேசாமல் தப்பித்துக் கொள்கிறார் இயக்குநர். அன்றாடம் சாதிவெறிச் சருகில் காய்ந்து கொண்டிருக்கும் உண்மையான கிராமம் இங்கே இருட்டடிப்பு செய்யப்படுகிறது. எடுத்ததற்கெல்லாம் கத்தியைத் தூக்கும் பருத்தி வீரனின் காதில் அவன் சாதியை இழித்துரைக்கும் அத்தி பூத்தாற் போன்ற ஒரு சில வார்த்தைகள் தவறியும் கூட விழுவதில்லை. நிஜத்தில் இறங்கத் துணிவற்ற இயக்குநரின் தந்திரமிது. ஆயினும் இதே தந்திரம்தான் பருத்தி வீரனது வீரத்தை வெள்ளித் திரையில் கொண்டுவர அவனது கண்களை உருட்டுவதற்கும், தலையை ஆட்டுவதற்கும் துள்ளித் துள்ளி நடப்பதற்கும் சிரமப்பட்டிருக்கிறது. உயிரற்ற உடலுக்கு அலங்கார ஆலாபனைகள்!

படத்தில் சேர்வைக்காரர்களாக தெளிவாக அடையாளம் காட்டப்படும் பாத்திரங்கள் தேவர் சாதிப் பெருமையினை, வீரத்தை, ஆணவத்தை பிறவிக் கடன் போலப் பேசுகிறார்கள். அதன் உண்மை நிலை பற்றியோ, மறுக்கும் வாதப்பிரதிவாதங்களோ, காட்சிகளோ கதையில் இல்லை. அவர்களது சித்தரிப்பில் ஒருவகை அப்பாவித்தனம் இருப்பதுபோல் கவனமாகக் காட்டியிருக்கிறார் இயக்குநர். அதனால்தான் அண்டிப்பிழைத்து வாழும் பிணந்தின்னி, பருத்திவீரனைக் கொன்று விட்டு, மூன்று மாதம் சிறையில் இருந்து வெளி வந்தபின் முத்தழகை தனக்கு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கழுவச் சேர்வையிடம் பேரம் பேசும் இளைஞன் முதலான பாத்திரங்கள் தேவர் சாதிப் பெருமையின் பிழைப்புவாதத்தை உணர்த்துவதாகப் பார்வையாளர்கள் எடுத்துக் கொள்ளவில்லை.

மேலும் இந்த அப்பாவித்தனமான சாதிப் பிதற்றல்களுக்குப் பதிலாக நல்ல தேவர்சாதிப் பண்பினை எடுத்துக் கூறும் வசனமும் படத்தில் உண்டு. குறத்தியுடனான சகவாசத்தை விட்டு விட்டு நம் சாதிக்காரர்களோடு சாராயம் காய்ச்சிப் பிழைக்கலாமே என்று கேட்கும் மச்சான் கழுவச் சேர்வைக்கு



பதிலளிக்கும் பருத்தி வீரனின் தந்தை காட்டிக் குடுப்பதும், கூட்டிக் கொடுப்பதும் தேவர்சாதிப் பண்பல்ல என்று மீசையை முறுக்குகிறார். குறத்தி கொல்லப்பட்டவுடன் குறத்தியின் மகளை திருமணம் செய்து கொண்டு அதை அசிங்கம் என்று பேசும் உறவினர்கள் மத்தியில் தலைநிமிர்ந்து வாழ்கிறார். நல்ல தேவர் சாதிப் பெருமைக்கு ஒரு முன்னுதாரணம்!

இதன்மூலம் வரம்புமீறும் தேவர்சாதிப் பெருமையை சமநிலைப்படுத்துகிறாராம் இயக்குநர். அது என்ன தேவர் சாதிப் பெருமையில் நல்லது, கெட்டது? பார்ப்பனர்களில் நல்ல பார்ப்பனர்களை பல தமிழ்ச் சினிமாக்கள் சித்தரித்திருப்பது போலத்தான் இதுவும். பாம்பில் ஏது நல்லது கெட்டது? கீழ்ச்சாதிகளை அடக்கி ஒடுக்க நினைக்கும் மனப்பான்மையிலிருந்தே தேவர்சாதியின் பெருமையும், ஆணவமும், வீரமும் புடைத்து நிற்கிறது. இவை தவிர அதன் இருப்புக்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் போல பட்டையும் பாகவதர் முடியும், வீரமும், மனிதாபிமானமும் கொண்டு தேவர் சாதியினர் வாழ வேண்டும் என்று ஒரு புத்திமதிக் கருத்து நிலவுகிறது. ஆனால் பசும்பொன் தேவரின் யோக்கியதை இம்மானுவேல் கொலையிலும், முதுகுளத்தூர் கலவரத்திலும் வெளிப்பட்டிருக்கிறது. ஆயினும் தேவரது படம் எல்லா தேவரின மக்கள் மத்தியிலும் கடவுளைப் போல வணங்கப்படுகிறது அவரது குரு பூஜைக்கு ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் போட்டி போடுகின்றன. இந்தப் போற்றிப்பாடுதலை அம்பலப்படுத்துவதற்கு எந்த இயக்குநருக்காவது துணிச்சல் உள்ளதா?

மாறாக, *தேவர்மகன்* தொடங்கி வைத்த தேவர்சாதிப் பெருமையை தென்தமிழ்நாட்டின் மண்வாசனையை வெளிப்படுத்துவதாக வெளிவந்த எல்லாப் படங்களிலும் அட்சத்திர சுத்தமாகக் காட்டுகிறார்கள். ஏதோ பிறக்கும் போதே அரிவாளுடன் பிறந்தது போலவும் சில்லறைப் பிரச்சினைகளுக்குக் கூட வெட்டுக்கத்தியை வீசுவது போலவும் பிறகு இந்த வீரத்தை துறந்துவிட்டு அமைதியாக வாழவேண்டும் எனவும் போதிக்கிறார்கள். மறவர் குலத்தின் வீரம் குறித்த இந்தச் சித்தரிப்பே எதார்த்தத்திற்குப் புறம்பானது.

சந்தர்ப்பவாதம், பிழைப்புவாதம், கோழைத்தனம் ஆகியவற்றில் தேவர் சாதி பெருமை பேசும் பிரமுகர்கள் முன்னணியிலிருக்கின்றனர். இதை நிரூபிப்

www.padippakam.com

பதற்குச் சிரமப்பட வேண்டியதில்லை. பாசிச ஜெயா, சசிகலா, தினகரன், மகாதேவன் எனும் மன்னார்குடி கும்பலின் பாதங்களில் விழுந்து அடிமைத்தனச் சேவகம் புரிகிறது இன்றைய தேவர் சாதிப் பெருமை. இதில் அ.தி.மு.க. தேவர்சாதிக் கட்சி என்ற பெருமை வேறு. ஆண்டாண்டு காலம் கிடா வெட்டி சாமி கும்பிட்டு வந்த இந்த சாதி வீரர்கள், கிடாவெட்ட தடைச்சட்டம் வந்தபோது அதை மீறி ஒரு கோழிக் குஞ்சைக் கூட அறுக்கத் துணியவில்லை. அரிவாளுடன் பிறந்த தேவர் சாதி வீரத்தின் நிஜம் இதுதான்.

கிராமப்புற மக்களிடத்தில் அரிவாள் தூக்கியதால் பலநூறுபேர் சிறையில் இருப்பது உண்மைதான். ஆயினும் இவர்கள் தொழில் முறைச் சண்டியர்கள் இல்லை. இவர்களில் பெரும்பான்மையினர் ஆத்திரத்தில் அறிவிழந்து, உணர்ச்சிவசப்பட்டு, சாதிவெறிக்காகவோ, சொத்துப் பிரச்சினைக்காகவோ, காதல் கள்ள உறவு காரணமாகவோ கணநேரத்தில் தவறிழைத்தவர்கள். இதன் விழுமியங்கள் குறித்த குழப்பம் நிலவுடைமைச் சமூகம் எனும் பாரிய நோயில் உள்ளது. இந்தத் தனிநபர் விபத்துக்களுக்கு சாதிப் பெருமையோ, குலப் பெருமையோ காரணமல்ல.

ஆனால் சண்டியர்களின் கதை வேறு. வேலைவெட்டிக்குப் போகாமல் பெண்களின் காசில் குடித்துவிட்டு ஊர் சுற்றும் கிராமப்புறத்தின் எச்சங்கள்தான் பருத்தி வீரன் போன்ற அழுக்குகள். இந்த அழுக்கையே அலங்காரமாய், அழகாய், கலகலப்பாய்க் காட்டுகிறார் இயக்குநர். இதை எவ்விதச் சுரணையுமின்றி இரசிக்கும் இர்சனைதான் நமக்கு நெருடலைத் தருகிறது.

ஒரு கிராமத்து ரவுடியின் வாழ்க்கையில் இத்தனைக் கொண்டாட்டங்களா என்று வியந்து பாராட்டுகிறார் சிறு பத்திரிக்கை அறிவாளி சாரு நிவேதிதா. ஏய் என்று கூப்பிட்டாலோ, சிறிய கம்பொன்றைத் தூக்கினாலோ ஓடிவிடக் கூடிய இவர் போன்ற பேடிகள் ரவுடி வாழ்வை இரசிக்கிறார்களாம்! அற்பவாத உணர்ச்சியில் திளைப்பதை நியாயப்படுத்துவதற்காக அறிவின் பெயரால் வேடமிடும் சாருநிவேதிதாவை விட வெறுமனே உணர்ச்சிவசப்பட்டு விசிலடிக்கும் ரஜினி இரசிகர்கள் மேலானவர்கள்.

பருத்தி வீரன்போன்ற சில்லறை ரவுடிகள் பணக்காரர்கள், பண்ணையார்களுக்கு எடுபிடிச் சேவகம் செய்து பிழைப்பார்கள். அடிமைகளுக்கு கலகலப்பான சுயேச்சையான வாழ்வு இருக்க முடியுமா என்ன? பருத்தி வீரன் உள்ளூரில் மட்டும் சண்டித்தனம் செய்வதால் ஊர் சுற்றி வம்பளப்பதற்கு அவனுக்கு நேரம் இருக்கிறது. அவன் விரும்பியபடி சென்னை ஜெயிலுக்குச் செல்லுமளவுக்கு பெரிய ரவுடியாக மாறியிருந்தால் அவன் வாழ்க்கையில் ஆட்டமும் பாட்டமும் முடிவுக்கு வந்திருக்கும். போலீசு போடுமா, எதிரி போடுவானா என்று பீதியிலும் அச்சத்திலும் வாழவேண்டியிருக்கும்.

கட்டப்பஞ்சாயத்து, மாமூல், ரியல் எஸ்டேட், கூலிப்படை என்று தொழில் விரிவடைவதற்கேற்ப பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. , எங்கு எப்போது

> "வேலை வெட்டிக்குப் போகாமல் பெண்களின் காசில் குடித்து விட்டு ஊர் சுற்றும் கிராமப்புறத்தின் எச்சங்கள்தான் பருத்திவீரன் போன்ற அழுக்குகள். இந்த அழுக்கையே அலங்காரமாய், அழகாய், கலகலப்பாய்க் காட்டுகிறார் இயக்குநர். இதை எவ்விதச் சுரணையுமின்றி இரசிக்கும் இரசனைதான் நமக்கு நெருடலைத் தருகிறது."



என்ன நடக்கும் என்று தெரியாத நிலையில் எந்நேரமும் அடியாட்களின் பாதுகாப்பில் வாழும் கோழையாகி விடுவான் அவன். பாசிஸ்டுகள் மட்டுமல்ல, ரவுடிகளும் அடிப்படையில் கோழைகள்தான். சாதிச் செல்வாக்கு, அரசியல் கட்சிகளின் அரவணைப்பு, போலீசுடன் கூட்டு என்ற பாதுகாப்பில்தான் அவர்கள் வீரம் எழும். ஆனால் ரவுடிகளெல்லாம் எதற்கும் அஞ்சாத மாவீரர்கள் போன்று தமிழ்ச் சினிமாக்கள் சித்தரிக்கும் கொடுமை எப்போது முடியுமோ தெரியவில்லை.

உண்மையில் கிராமங்களின் வாழ்க்கையிலும், ரவுடிகளின் இயக்கத்திலும் இந்தக் கலகலப்பும், நகைச்சுவையும், சுறுசுறுப்பும் இல்லை. பல நூற்றாண்டுகளாய் தனக்குத்தானே சங்கிலியில் கட்டிக் கொண்டு மூடுண்ட கிராமங்கள் காலனிய ஆட்சிக்குப் பிறகு பல காரணங்களால் வெளியுலகத்தைத் தேடிச் சென்றன. விவசாயம் திட்டமிட்டு அழிக்கப்படும் இன்றைய உலகமயமாக்கச் சூழலிலோ கிராமங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன.

இராமநாதபுரத்தின் யதார்த்தம் மும்பை தாராவிக் குடிசைப் பகுதியில் சிறைப்பட்டிருக்கிறது. மதுரை, தேனி மாவட்டங்களின் யதார்த்தம் திருப்பூரின் பொந்துகளில் எந்திரமாய் இயங்கிக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டங்களின் யதார்த்தம் கேரளாவிற்கு கம்பி கட்டும் வேலைக்கு ஓடிக் கொண்டிருக்கிறது. தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் யதார்த்தம் பெங்களூரில் கட்டிடம் கட்டவும் தள்ளுவண்டியில் பிழைக்கவும் அலைந்து கொண்டிருக்கிறது. வட மாவட்டங்களின் யதார்த்தம் ஒவ்வொரு நாளும் சென்னை நகரில் ஆயிரக்கணக்கில் வந்து குவிந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு முதியவர்களும், வாழவழியற்ற பெண்களும்தான் வேறு வழியின்றி கிராமங்களில் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் கிராமங்கள் பாலைவனம் போல வெறிச்சோடித்தான் கிடக்கின்றன. சாகடிக்கப்பட்டு வரும் இந்தக் கிராமங்களில் சோர்வும், சலிப்பும், விரக்தியும், அவலமும், வெற்று அரட்டையும்தான் இருக்கின்றன.

அவ்வகையில், பருத்தி வீரன் கிராமங்களைக் கேலி செய்கிறது. எந்த உழைப்பாளிகள் கிராமங்களிலிருந்து நகரம் நோக்கித் துரத்தப்பட்டு நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்களோ அவர்களும் தாங்கள் இழிவுபடுத்தப்படுவது அறியாமல் இந்தத் திரைப்படத்தை இரசிக்கிறார்கள். இந்தப் பொறுக்கி வீரன் தங்களைக் கேலி செய்வதாக சாதாரண உழைப்பாளி மக்கள் முதல் படிப்பாளி ரசிகர்கள் வரை யாருமே உணர்வதில்லை.

ஒரு திரைப்படத்தின் நாயகன் விவசாயியாகவோ, தொழிலாளியாகவோதான் இருக்க வேண்டும் என்றில்லை. அவன் ஒரு நிலப்பிரபுவாகவோ, காமவெறி பிடித்த மிருகமாகவோ இருக்கலாம். ஒரு சொறிநாயாகக் கூட இருக்கலாம். அவனுடைய வாழ்க்கையை இயக்குநர் எப்படிப் பார்க்கிறார், எப்படிப் பார்ப்பதற்கு ரசிகனைப் பழக்குகிறார் என்பதுதான் பிரச்சினை. ஒரு சொறிநாயின் அழகை ரசிக்கக் கற்றுக் கொடுத்திருக்கிறார் இயக்குநர்.

• வேல்ராசன்


படிப்பகம்

www.padippakam.com

# கூந்தலைத் துறந்த வறுமை!



"மூன்றடிக் கூந்தலை முன்னூறு ரூபாய்க்கு விற்ற பெண்களின் வாழ்க்கை கூறும் செய்தி என்ன? வறுமையின் முன் கூந்தல் தன் மரபுவழி மகிமையை உதிர்த்துவிட்டது என்பதா? அல்லது தேசிய வளர்ச்சி விகிதம் என்பது ஏழைப் பெண்களின் மயிருக்குச் சமம் என்று புரிந்து கொள்வதா?

நக்கீரனில் ஒரு செய்தி படித்தேன். ஆந்திர எல்லையிலிருக்கும் திருவள்ளூர் மாவட்டக் கிராமங்களில் வாழும் ஏழைப்பெண்கள் அதிலும் தலித் பெண்கள், சிலர் வறுமை காரணமாக தம் முடியை விற்று வருகின்றனராம். ஒரு அடி கூந்தலின் விலை 100 ரூபாய். பெண்களிடம் முடி கொள்முதல் செய்து சென்னைக்கு அனுப்பும் தரகர்கள் கிராமங்களில் அலைகிறார்களாம். சென்னையில் இம்முடிகளுக்கு சாயம் தீட்டி வெளிநாடுகளுக்கு அழகான சவரிகளாக ஏற்றுமதி செய்கிறார்களாம். அடர்த்தியான ஒரு கிலோ கூந்தலின் விலை 5000 ரூபாயாம்.

சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை கூந்தலைப் பற்றித்தான் எத்தனைக் கவிதைகள்! பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா இல்லையா என்ற பிரச்சினையை நக்கீரனும், இறையனாரும் இன்றைக்கும் ஒலிபெருக்கி வைத்து விவாதித்துக் கொண்டிருப்பதை நாம் அறிவோம். தம் கூந்தல் மீது பிற ஆடவரின் கை படுவதைக்கூட கற்புள்ள பெண்கள் ஒப்புவதில்லை என்கிறது பழந்தமிழ் இலக்கியம். அந்த அளவுக்கு கூந்தலின் மகிமை இங்கே வேர் பிடித்துள்ளது.

துரியோதனன் வீழ்த்தப்பட்ட பின்புதான் அவிழ்த்த கூந்தலை அள்ளி முடிப்பேன் என்ற பாஞ்சாலி சபதம் மகாபாரதப் போரின் துவக்கம். மலரின் வாசமும், கள்ளின் போதையும் கொண்ட சீதையின் கூந்தலில் இராவணன் மயங்கினான், மடிந்தான் என்று தன் ஒப்பாரியில் மண்டோதரி புலம்புவதாய் கம்பராமாயணம் பாடுகிறது. இப்படி இதிகாச நாயகிகளின் கதைகளும் கூந்தலைத் தழுவியே செல்கிறது.

சிங்கத்துக்கு பிடரி, மயிலுக்குத் தோகை, சேவலுக்கு கொண்டை, யானைக்கு தந்தம் என எல்லா ஜீவராசிகளிடையேயும் ஆண் உயிரினங்கள் மட்டும் 'அழகாய்' வலம் வர, மனித இனத்தில் மட்டும் பெண் 'அழகான' கூந்தலோடு வலம் வருவதாய் சிலாகிக்கிறார் ஒரு சமகாலக் கவிஞர்.

இப்படிக் கற்புக்கும், அழகுக்கும், கதைப்பாடலுக்கும் அடையாளமாய், அடிநாதமாய் அறியப்பட்ட கூந்தல் தான், ஒரு பெண் விதவையானதும் அவளிடமிருந்து இரக்கமின்றிப் பறிக்கப்பட்டது. மேல் சாதி விதவைப் பெண்களுக்கு மொட்டையடிக்கும் பழக்கம் நேற்றுவரை நமது சமூகத்தில் இருக்கத்தானே செய்தது? இந்தக் கூந்தல் பறிப்பின் நோக்கம் அவளை யாரும் விரும்பக்கூடாது, அழகு அவளை அண்டக்கூடாது என்பதுதான். அழகு - அசிங்கம் என்ற இரு துருவங்களை நோக்கியும் பெண்ணைத் தள்ளுவதற்கு ஆணின் கையில் சிக்கிய ஆயுதம் கூந்தல்.

இப்படி புராண காலத்தில் பிடித்த முடியை ஆணாதிக்கம் இன்னமும் விடவில்லை. பன்னாட்டு நிறுவனங்களின் அழகு சாதனப் பொருட்களுக்கான விளம்பரங்கள் அடைமழை போலப் பெய்யும் காலமிது. அழகு நிலையங்கள். பெண்களின் அழகு குறித்த கவலையை அன்றாடப் பிரச்சினையாக்கி விட்டன. அழகின்மையின் ஆபத்துக்களை அச்சுறுத்தும் விதத்தில் உணர வைத்து அழகை விற்று வருகிறார்கள்.

அதில் கூந்தலுக்கான விதவிதமான எண்ணெய்களும், பசைகளும், தைலங்களும் நூற்றுக்கணக்கில் சந்தையில் இருக்கின்றன. காத்திருக்க முடியாத ஆண்களுக்கும் பெண்களுக்கும் உடனே முடியை நட்டுத்தரும் ஆடம்பர அறுவைச்சிகிச்சைகளையும் 'அறிவியல்' வளர்த்திருக்கிறது. ஆக, பெண்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு தமது நேரத்தையும், பணத்தையும், கவலையையும் கூந்தலுக்காகச் செலவழிக்கின்றனர். அன்றும் இன்றும் கூந்தல் கவலையிலிருந்த தப்பிப் பிழைத்த பெண்கள் அநேகமாக இல்லை.

இதனால்தான் திருவள்ளூர் மாவட்டப் பெண்கள் கூந்தலை விற்கும் செய்தியை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. ஆயினும் உலகமயம் என்ற நாணயத்தின் மறுபக்கம் இப்படித்தான் இருக்க முடியும் போலும்! வழக்கமான உணவு வகைகளை ருசித்துச் சலித்து உலக ருசிகளுக்காக அலைபாயும் நாக்குகள் பெருகிக் கொண்டிருக்கும் காலத்தில்தான் 'இரண்டு ரூபாய் அரிசி' வாக்குகளை அள்ளித் தருகிறது. குளோனிங் முறையில் மனிதனையும் அவனுடைய உறுப்புகளையும் பிரதி எடுத்துவிட முடியும் என்று அறிவியல் முழங்கும் காலத்தில்தான் கருப்புச் சந்தையில் சிறுநீரகம் விற்பனையாகிறது.

தேசிய வளர்ச்சி விகிதம் பத்து சதவீதம் என்று ப.சிதம்பரம் கொட்டி முழங்கிக் கொண்டிருக்கும் அதேகாலத்தில்தான் மளிகைக்கடன் அடைப்பதற்காகப் பெண்களின் கூந்தல் கொய்யப்படுகிறது. நாட்டை முன்னேற்றுவதற்காக 'மக்களை மொட்டையடிப்பது' என்ற உவமானம் அதன் நேர்ப்பொருளிலேயே இப்போது உண்மையாகி விட்டது.

மூன்றடிக் கூந்தலை முன்னூறு ரூபாய்க்கு விற்ற பெண்களின் வாழ்க்கை கூறும் செய்தி என்ன? வறுமையின் முன் கூந்தல் தன் மரபுவழி மகிமையை உதிர்த்து விட்டது என்பதா? அல்லது தேசிய வளர்ச்சி வீதம் என்பது ஏழைப் பெண்களின் மயிருக்குச் சமம் என்று புரிந்து கொள்வதா?

● சாக்ரடீஸ்

www.padippakam.com

அருந்ததி ராய் நேர்காணல்:



# இது ஒரு முழுநிறை யுத்தம்!

'தெகல்கா' ஆங்கில வார இதழுக்கு (31.3.07) எழுத்தாளர் அருந்ததி ராய் அளித்துள்ள பேட்டியை அளவு கருதி சற்றே சுருக்கித் தருகிறோம். அமைதி வழியிலான மக்கள் போராட்டங்கள் அனைத்தும் அலட்சியப் படுத்தப் படும் சூழலில், நக்சல்பாரிகளுடைய ஆயுதப் போராட்டத்தின் நியாயத்தை அங்கீகரிக்கிறார் ராய்.

அதே நேரத்தில், மாவோயிஸ்டு களும் அடக்குமுறையில் ஈடுபடுவ தாகவும், ஸ்டாலின்,மாவோ ஆகி யோரது ஆட்சியில் லட்சக்கணக்கா னோர் படுகொலை செய்யப்பட்ட தாகவும் சாடுகிறார். ஸ்டாலின் மாவோ மீது ஏகாதிபத்தியங்கள் பரப்பியுள்ள அவதூறுகளை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தி நாம் ஏற்கெனவே எழுதியிருக்கி றோம். நீளம் கருதியும், மேற்கூறிய விமரிசனங்கள் இந்தப் பேட்டியின் மையக் கருத்துக்கு நேரடியாகத் தொடர்பற்றவை என்பதனாலும் பேட்டியின் அப்பகுதியை வெளியிடவில்லை.

நிலவும் ஏகாதிபத்தியக் கொடுங் கோன்மையையும் ஜனநாயக மோசடியையும் சகித்துக் கொள்ள முடியாமலும்,அதே நேரத்தில் கம்யூ னிச அமைப்புகளுடன் இணங்கிப் போகமுடியாமலும் இருக்கும் ஒரு அறிவுஜீவி, இன்றைய சூழலில் நடுநிலை வகிக்க முடியுமா என்பதே அவருடைய பேட்டி எழுப்பும் கேள்வி.

**தற்போதைய சூழலில் நாடு முழு வதும் வன்முறை அதிகரித்து வருகி றது. இந்த அறிகுறிகளைத் தாங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்? இதனை எப் பொருளில் நாம் காண வேண்டும்?**

இந்த அறிகுறிகளைக் காண நீங்க ளொன்றும் பிறவி மேதையாக இருக்க வேண்டியதில்லை. நம்மிடையே பேரா சையும், நுகர்வு வெறியும் கருக் கொண்ட ஒரு நடுத்தர வர்க்கம் வளர்ந்து வருகிறது. தொழில் வளம் மிக்க மேற்கத்திய நாடுகளைப் போல வளங்களைக் கொள்ளையிடவும், அடி மைப்படுத்திக் கொள்ளவும் நம்மிடம் காலனி நாடுகள் இல்லை. எனவே, நாம் நம்மையே அடிமைப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். நமது உறுப்புக்க ளையே நாம் தின்னத் தொடங்கி விட் டோம். பலவீனமான மக்களிடமிருந்து நிலம், நீர், வளங்களைப் பறித்துக் கொள்வதன் மூலம் மட்டுமே, அடங்கக் கூடிய இந்தப் பேராசை வெறியே தேசிய உணர்வாகவும் நல்லொழுக்க மாகவும் சித்தரிக்கப்படுகிறது.

சுதந்திர இந்தியாவில் தொடுக்கப் பட்ட பிரிவினைவாதப் போர்களி லேயே பெரு வெற்றியடைந்த ஒரு போரை இதோ நாம் நம் கண் முன் னால் காண்கிறோம். ஆம், நம் நாட்டின் மேட்டுக்குடி வர்க்கங்களும் நடுத்தர வர்க்கங்களும் ஏனைய இந்திய மக்களி டமிருந்து பிரிந்து தனி நாடாகவே ஆகி விட்டனர் ............ இப்பொழுது இந்தப் புதிய வல்லரசின் மேன்மை தங்கிய பிர ஜைகளுக்கு, தங்களது பிரம்மாண்ட விளையாட்டுப் பொருட்களான கார் கள், வெடிகுண்டுகள், கண்ணி வெடி களை மென்மேலும் உற்பத்தி செய்வ தற்கு நிலமும் தேவைப்படுகிறது. எனவே இது ஒரு முழுநிறை யுத்தம். இரண்டு தரப்பினரும் தத்தம் ஆயுதங்க ளைத் தெரிவு செய்து கொண்டிருக்கிறார் கள்.

> **'நீதிமன்றங்களில் மக்கள் இயக்கங்கள் நியாயம் வேண்டி நின்ற காலம் ஒன்று இருந்தது. நீதிமன்றங்கள் அநீதியான தீர்ப்புக்களைப் பொழிகின்றன. வறிய மக்களை இழிவுபடுத்தும் வகையில் நீதிமன்றம் பயன்படுத்தும் மொழியைக் கேட்கும்போது அதிர்ச்சியால் நமது மூச்சே நின்றுவிடும் போலிருக்கிறது.'**

அரசாங்கமும் தொழிற்குழுமங்க ளும் கண்டுபிடித்திருக்கும் ஆயுதத்தின் பெயர் கட்டுமான மறு சீரமைப்பு. உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, அன்னிய நேரடி மூலதனம், அவர்களுக்கு இணக் கமாக நீதிமன்றம் வழங்கும் உத்தரவு கள், இணக்கமான அரசியல் வல்லுனர் கள், கொள்கை வகுப்பாளர்கள், கார்ப்ப ரேட் ஊடகங்களின் இணக்கமான உதவி, இறுதியாக போலீஸ் படை ............ இவற்றின் துணையுடன் இந்தச் 'சீரமைப்பு' மக்களின் தொண்டைக் குழிக்குள் மூர்க்கமாகக் குத்தித் திணிக் கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிப் போக்கை எதிர்த்துப் போராட விரும்புவோர் இது நாள் வரை, தர்ணாக்களையும், சத்தி யாக்கிரகங்களையும், நீதிமன்றங்களை யும், நேச சக்திகள் என்று அவர்கள் கரு திக் கொண்டிருந்த ஊடகங்களையும் தான் தங்கள் ஆயுதங்கள் என்று இது வரை நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இன்றோ துப்பாக்கிகளை நாடுபவர்களின் எண்ணிக்கை அதிக ரித்த வண்ணம் இருக்கிறது. இந்த வன் முறை வளருமா? ஆம், வளரத்தான் செய்யும். மக்கள் நலனையும் முன்னேற் றத்தையும் அளவிடுவதற்கு 'தேசிய வளர்ச்சி விகிதத்தையும்' பங்குச் சந் தைக் குறியீட்டு எண்களையும் அளவு கோல்களாக அரசு பயன்படுத்தும் வரை இந்த வன்முறையும் அதிகரிக்கத் தான் செய்யும். நான் இந்த அறிகுறி களை எவ்வாறு காண்கிறேன்? அது தான் கண் எதிரே கொட்டை எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறதே.

தலைக்கு மேலே சுற்றும் மின்விசிறி யில் பட்டுத் தெறித்து நாற்புறமும் வீசிக் கொண்டிருக்கிறது மலம். இதைப் புரிந்து கொள்வது அத்தனைக் கடினமா என்ன?

''நான் வன்முறையில் இறங்க மாட்டேன், ஆனால் அதேவேளை யில் நாட்டின் இன்று நிலவும் சூழ லில், வன்முறையைக் கண்டனம் செய்யவும் மாட்டேன். அவ்வாறு


படிப்பகம்

www.padippakam.com

**கண்டனம் செய்வது நெறியற்றது'' என முன்பொரு முறை நீங்கள் கூறியிருந்தீர்கள். அதனை விளக்க முடியுமா?**

நான் ஒரு கொரில்லாப் போராளியானால் மற்றவர்களுக்குச் சுமையாகத்தான் இருப்பேன். மற்றப்படி 'நெறியற்றது' என்ற சொல்லை நான் பயன்படுத்தினேனா எனச் சந்தேகமாக இருக்கிறது. ஏனெனில், அறம், நெறி என்பவையெல்லாம் மிகவும் நெகிழ்ச்சியான, புதிரான சொற்கள். அவை தட்பவெப்ப நிலைகளைப் போல மாறக்கூடியவை.

நான் உணர்வது இதுதான்; சாத்வீக இயக்கங்கள் நம்முடைய ஜனநாயக அமைப்பின் எல்லாக் கதவுகளையும் ஆண்டுக்கணக்கில் தட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு தட்டித் தட்டி அவர்கள் கண்டதென்ன? அலட்சியமாக நிராகரிக்கப்பட்டதையும், அவமானப்படுத்தப்பட்டதையும் தவிர!

போபால் விஷ வாயுவினால் பாதிக்கப்பட்டோரையும், நர்மதை பாதுகாப்பு இயக்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்நாட்டில் வெறெந்த மக்கள் இயக்கத்திற்கும் இல்லாத அளவில் நர்மதை பாதுகாப்பு இயக்கத்திற்கு பிரபலமான தலைமை, போதிய சக்திகள், ஊடகங்களின் ஆதரவு என் எல்லாம் இருந்தது. ஆனால் ஏன் அது வெற்றி பெற முடியவில்லை? அந்த மக்கள் தமது போராட்ட வழிமுறைகளை மறுபரிசீலனை செய்ய விரும்புகிறார்கள். அத்தகைய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். டாவோஸில் நடைபெறும் உலகப் பொருளாதார மன்றக் கூட்டத்தில் போய் (உலக முதலாளிகள் கூட்டத்தில் - மொ-ர்) சத்தியாக்கிரகத்தின் மேன்மையைப் பற்றி சோனியா காந்தி பேசுகிறார் என்றால், அப்போதாவது நாம் யோசிக்க வேண்டாமா?

உதாரணமாக, ஒரு ஜனநாயக நாட்டில் பெருந்திரளான மக்களின் சட்ட மறுப்பு அல்லது ஒத்துழையாமை சாத்தியமா? அதுவும் பொய்களையும் புனைச் சுருட்டுக்களையும் பரப்பும் கார்ப்பரேட் நிறுவனங்களின் கைப்பாவையாகச் செயல்படும் ஊடகங்களின் யுகமான இன்றைய காலகட்டத்தில் அது சாத்தியமா? பிரபலமானவராக இல்லாத ஒருவர் உண்ணாவிரதம் இருந்து என்ன பயன்? ............ நங்லா மச்சி சேரி மக்களோ அல்லது பட்டி சுரங்கத்தின் தொழிலாளர்களோ உண்ணாவிரதமிருந்தால், யாரேனும் கண்டு கொள்வார்களா? ஐரோம் சர்மிளா கடந்து ஆறாண்டுகளாக உண்ணாவிரதமிருந்து வருகிறார். இதிலிருந்தெல்



**நர்மதா பள்ளத்தாக்கு மக்களுக்காகப் போராடும் மேதா பட்கர் ஏன் வெற்றி பெறமுடியவில்லை?**

லாம் நம்மில் பலர் பாடம் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது என நினைக்கிறேன். ............

நாம் இப்பொழுது ஒரு முற்றிலும் மாறுபட்ட கால கட்டத்தில், மாறுபட்ட இடத்தில் இருக்கிறோம். ............ மக்கள் போராட்டம் என்பதையே துரோகத்தனமான வியாபாரமாக மாற்றி விட்ட அரசு சாரா நிறுவனங்களின், தன்னார்வக் குழுக்களின் அல்லது வேடதாரிகளின் யுகத்தில் நுழைந்திருக்கிறோம். பேரணிகளும், ஆர்ப்பாட்டங்களும் 'ஸ்பான்சர்' செய்யப்படுகின்றன. மாபெரும் போராளிகளைப் போல சண்டப் பிரசண்டம் செய்து விட்டு, பின்னர் தனது பிரச்சாரத்தின் ஒரு சிறு அம்சத்தைக் கூட தொடராமல் கை கழுவும் சமூக மன்றங்களைக் காண்கிறோம். போராட்டங்கள் போலவே தம்மைக் காட்டிக் கொள்ளும் தோற்றப் போலிகள் (virtual) எங்கும் நிறைந்திருக்கின்றன.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்க்கும் கூட்டங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை முன்னிறுத்துபவர்களாலேயே ஏற்பாடு செய்யப்படுகின்றன. ............ நேரடியாகவும், மறைமுகமாகவும் டாடாவின் இரு அறக்கட்டளைகள், நாடு முழுவதுமுள்ள செயல்வீரர்களுக்கும், மக்கள் இயக்கங்களுக்கும் நிதியளித்து வருகின்றன. இதன் காரணமாகத்தான் நந்திகிராமை விடவும் சிங்கூரில் எதிர்ப்பு ஆரவாரம் குறைவாக இருந்தது போலும். டாடாக்களும், பிர்லாக்களும் காந்திக்கே படியளந்தவர்கள். நமது முதல் தன்னார்வத் தொண்டு நிறுவனமே காந்திதான் என்றும் சொல்லலாம்.

இப்பொழுதுள்ள அரசு சாரா நிறுவனங்கள் மிகுதியாகக் கூச்சலிடுகின்றன. கற்றை கற்றையாக அறிக்கைகள் தயாரிக்கின்றன. ஆனால் அரசாங்கமோ அவர்களுடன் சந்தோஷமாகச் சக வாழ்வு நடத்துகிறது. இவற்றிலிருந்தெல்லாம் நாம் என்ன விளங்கிக் கொள்வது? எங்கும் புழுத்து நெளியும் தொழில்முறை சீர்குலைப்பாளர்களால் உண்மையான அரசியல் போராட்டங்கள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. ............

நீதிமன்றங்களில் மக்கள் இயக்கங்கள் நியாயம் வேண்டி நின்ற காலம் ஒன்று இருந்தது. நீதிமன்றங்கள் அநீதியான தீர்ப்புக்களைப் பொழிகின்றன. வறிய மக்களை இழிவுபடுத்தும் வகையில் நீதிமன்றம் பயன்படுத்தும் மொழியைக் கேட்கும்போது அதிர்ச்சியால் நமது மூச்சே நின்றுவிடும் போலிருக்கிறது. ............ இந்த நாட்டின் மிகவும் சக்தி வாய்ந்த நிறுவனத்தின் சித்தாந்த இதயத்தை ,இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. கார்ப்பரேட் ஊடகங்களோடு சேர்ந்து நீதிமன்றங்களும் நவீன காலனியாதிக்கத்தின் அச்சாணிகளில் ஒன்றாக மாறி விட்டதையே இவை அனைத்தும் உணர்த்துகின்றன.

இதுதான் நாம் காணும் சூழல். தாங்கள் நசுக்கித் தரைமட்டமாக்கப்படுவதை உணரும் மக்கள், முடிவில்லாத 'ஜனநாயக' வழிமுறைகளில் போராடி இறுதியில் இழிவுபடுத்தப்படும் மக்கள் வேறென்ன செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்?

ஆனால் இதனுடைய பொருள் வன்முறை அல்லது சாத்வீகம் என்ற இரண்டு முரண்பட்ட வழிமுறைகள் தான் உள்ளன என்பதல்ல. ஆயுதந்தாங்கிய போராட்டத்தில் நம்பிக்கையோடும், அதேவேளையில் தங்களது ஒட்டுமொத்த அரசியல் வழிமுறைகளில் அதனை ஒரு பகுதியாகவும் மட்டுமே கருதிச் செயல்படும் அரசியல் கட்சிகள் உள்ளன. இத்தகைய போராட்டங்களில் ஈடுபடும் அரசியல் ஊழியர்கள் சிறை, சித்திரவதை, பொய்வழக்குகள் என மிகக் கொடூரமாக ஒடுக்கப்படுகின்றனர். ............

மற்ற எல்லா வழிகளையும் முயன்று விரக்திதான் மிச்சம் என்ற நிலையில், மக்கள் இந்த வழியைத் தேர்ந்தெடுக்கும் பொழுது, நாம் அவர்களைக் கண்டிக்க முடியுமா? நந்திகிராம் மக்கள் தர்ணா நடத்தி பாட்டு பாடிக் கொண்டு உட்கார்ந்திருப்பார்களேயானால் மேற்கு வங்க அரசு பணிந்திருக்குமா? அப்படி யாராவது நம்புகிறீர்களா?

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மாறுபட்ட காலத்தில், நிலவும்

www.padippakam.com

சட்டீஸ்கரில் நடைபெற்ற மாவோயிஸ்ட்டுகளின் மாநாடு



**"உள்ளூர் மக்களின் ஆதரவின்றி எந்தக் கொரில்லாப்படையும் இயங்க முடியாது. மாவோயிஸ்டுகளுக்கான ஆதரவு பெருகிக் கொண்டுதான் வருகிறதேயொழிய குறையவில்லை."**

அமைப்பைப் பாதுகாத்துக் கொள்வதற்கான போராட்டம் என்பது பிரயோசன மற்றது. (சந்தேகமின்றி; நம்மில் பலர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்தான்) பிரயோசனமாக ஏதேனும் செய்ய விரும்புகிறவர்கள் அதற்கு மிகக் கடுமையான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அத்தகைய விலையைக் கொடுக்க தயாராயிருப்பவர்களை என்னால் கண்டிக்க இயலாது.

**நீங்கள் மிக அதிகமான இடங்களுக்கு பயணித்து வருகிறீர்கள். பிரச்சினைக்குரிய பகுதிகள் குறித்தும், அங்கே நிலவும் சூழல், போராடும் தரப்புகள் குறித்தும் சொல்ல இயலுமா?**

மிகப் பெரிய கேள்வி - எப்படிச் சொல்வது? காஷ்மீரை ஆக்கிரமித்திருக்கும் இராணுவம், குஜராத்தில் நிலவும் நவீன பாசிசம், சத்தீஸ்கரில் நிகழ்ந்து வரும் உள்நாட்டுப் போர், ஒரிசாவைக் கற்பழிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள், மூழ்கிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான நர்மதை பள்ளத்தாக்கு கிராமங்கள், முழுப் பட்டினியின் நுனியில் விளிம்பில் தவித்து நிற்கும் மக்கள், சூறையாடப்படும் காடுகள், டௌ கெமிக்கல்ஸ் என்ற பெயரில் நந்திகிராமில் நுழையும் யூனியன் கார்பைடு நிறுவனத்தை உச்சி மோந்து வரவேற்கும் மேற்கு வங்க அரசு, இதனைக் காண்பதற்கு இன்னும் உயிரோடிருக்கும் போபால் விஷ வாயுவினால் தாக்கப்பட்ட மக்கள். ............

இவை மட்டுமல்ல, மறைந்து கொண்டு நஞ்சைப் பரப்பும், மீண்டும் வெடிக்கக் காத்திருக்கும் இந்துத்துவாவை எப்படிக் குறிப்பிடாமல் இருக்க முடியும்? இவையனைத்தையும் விட மிகக் கேவலமானது என்னவெனில், இன்னமும் தீண்டாமையைப் போற்றிப் பாதுகாத்து வரும் ஒரு பண்பாடாக, சமூகமாக, நாடாக நாம் வாழ்கிறோம். நமது பொருளாதார வல்லுனர்கள் கோடிகளைக் கணக்கிட்டு, வளர்ச்சி விகிதத்தைக் குறித்து பீற்றிக் கொண்டிருக்கும் வேளையில், இலட்சக்கணக்கான மலம் அள்ளும் தொழிலாளர்கள் தம் வயிற்றைக் கழுவுவதற்காக கிலோக் கணக்கில் பிறரது மலத்தைத் தலையில் சுமக்கிறார்கள். அடுத்தவன் மலத்தைத் தலையில் சுமக்க மறுத்தால் அவர்கள் பட்டினி கிடந்து சாகவேண்டும். அடேயப்பா, இது பெரிய்ய புடுங்கி வல்லரசு தான்!

**சமீபத்தில் வங்கத்தில் நிகழ்ந்த அரசு, போலீசு வன்முறையை நாம் எப்படிப் பார்ப்பது?**

மற்ற இடங்களில் நடக்கும் போலீசு, அரச வன்முறையிலிருந்து எந்த வகையிலும் இது வேறுபட்டதல்ல. பொய், பம்மாத்து, இரட்டைவேடம் ஆகியனவற்றில் தேர்ந்த மற்ற அரசியல் கட்சிகளுக்கு பொது நீரோட்ட இடதுசாரிகள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல. ............ எங்கும் விசித்திரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. சவுதி அரேபியாவில் பனி பொழிகிறது. பகலில் ஆந்தைகள் ஓலமிடுகின்றன. சீன அரசு தனிச் சொத்துடைமைக்காக மசோதா நிறைவேற்றுகிறது. ............ சீனத்தின் கம்யூனிஸ்டுகள் 21-ஆம் நூற்றாண்டின் மாபெரும் முதலாளிகளாக உருவெடுத்துக் கொண்டிருக்கும் போது நமது நாட்டு பாராளுமன்றக் கம்யூனிஸ்டுகளிடம் நாம் வேறெதை எதிர்பார்க்க முடியும்? நந்திகிராமும், சிங்கூரும் மிகத் தெளிவான அபாயச் சின்னங்கள்.

போயும் போயும் நவீன முதலாளித்துவத்தில்தான் எல்லாப் புரட்சிகளும் முடிவடைய வேண்டுமோ, வியப்பாகத்தான் இருக்கிறது. சிந்தித்துப் பாருங்கள். பிரெஞ்சுப் புரட்சி, ரசியப் புரட்சி, சீனப் புரட்சி, வியத்நாம் யுத்தம், நிறவெறிக்கு எதிரான போராட்டம், சொல்லிக் கொள்ளப்படும் காந்திய சுதந்திரப் போராட்டம் ............ இவையனைத்தும் எங்கு போய் நின்று கொள்கின்றன? முதலாளித்துவம் என்பதுதான் நம் கற்பனையின் முடிவா?

**பிஜாப்பூரில் 55 போலீசுக்காரர்களை மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். மாவோயிஸ்டுகளை அரசின் மற்றொரு முகம் எனச் சொல்வது சரியாக இருக்குமா?**

போராளிகள் எவ்வாறு அரசின் மறுமுகமாக இருக்க முடியும்? நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்களை, அவர்களுடைய வழிமுறைகள் எவ்வளவுதான் கொடூரமானவையாக இருந்த போதிலும், அவர்களை அரசின் இன்னொரு முகம் என யாரேனும் அழைக்க இயலுமா? அப்படியானால் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய அல்ஜீரியர்கள், அல்லது நாஜிக்களை எதிர்த்துப் போராடியவர்கள், அல்லது காலனிய அரசுகளை எதிர்த்துப் போராடியவர்கள், அல்லது அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிராக ஈராக்கில் போராடிக் கொண்டிருப்பவர்கள், இவர்கள் அனைவரையும் அரசின் இன்னொரு முகம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

அறிக்கைகளால் உருவாக்கப்படும் மேம்போக்கான இத்தகைய 'மனித உரிமை'ச் சொல்லாடல்களும், எல்லா வன்முறைகளையும் கண்டிப்பதாகக் கூறிக் கொள்ளும் இந்தப் பழி போடும் விளையாட்டும் ............ இப்பிரச்சினைகள் அனைத்திலும் உறையும் உண்மையான அரசியலைக் கரைத்து வெளியேற்றி விடுகிறது. நாம் எவ்வளவுதான்


படிப்பகம்

www.padippakam.com

தூய்மையாக இருக்க விரும்பினாலும், நமது ஒளிவட்டங்களுக்கு நாமே எவ்வளவுதான் மெருகேற்றிக் கொண்டாலும், வருந்தத்தக்க உண்மை என்னவென்றால் அத்தகைய தூய்மையான வாய்ப்புகளோ மாற்றுகளோ நம்முன் இல்லை.

சத்தீஸ்கரில் அரசினால் நிகழ்த்தப்படும் உள்நாட்டுப் போர், புஷ்ஷினுடைய சித்தாந்தத்தை வெளிப்படையாக நடைமுறைப்படுத்துகிறது. "நீ எங்களோடு இல்லையென்றால், நீ தீவிரவாதிகளோடு இருக்கிறாய்!" என்று கூறுகிறது.

அரசின் பாதுகாப்புப் படைகள் ஒருபுறமிருக்க, இப்போரின் அச்சாணியே சல்வாஜுடும் என்ற படைதான். இது அரசின் நிர்ப்பந்தத்தினால் ஆயுதமேந்தியிருக்கின்ற சாதாரண மக்களைக் கொண்ட படை. ............ இந்திய அரசு ஏற்கெனவே காஷ்மீரிலும், மணிப்பூரிலும், நாகாலாந்திலும் இத்தகைய படையை உருவாக்க முயன்றிருக்கிறது. அதன் விளைவாக, பத்தாயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ............

தோற்றுப்போன இத்தந்திரங்களை இப்பொழுது இந்தியாவின் இதயப் பகுதியிலேயே இறக்குமதி செய்ய அரசு முயன்று வருகிறது. தமது கனிம்வளம் மிக்க நிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பழங்குடி மக்கள் போலீசு முகாம்களுக்கு விரட்டியடிக்கப்படுகின்றனர்: நூற்றுக்கணக்கான கிராமங்கள் பலவந்தமாகக் காலி செய்யப்பட்டிருக்கின்றன. இரும்புத் தாது வளம் மிக்க அவர்களது நிலங்கள் மீது டாடா, எஸ்ஸார் போன்ற முதலாளிகள் கண் வைத்து விட்டனர். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன. ஆனால் அவற்றின் ஷரத்துக்கள் யாருக்கும் தெரிவதில்லை. நிலக் கையகப்படுத்தல் தொடங்கி விட்டது. ............ எல்லோருடைய பார்வையும், அரசின் கூலிப் படைகளுக்கும், கொரில்லாக் குழுக்களுக்குமிடையிலான வன்முறையில் பதிந்திருக்க, பன்னாட்டுக் குழுமங்கள் சத்தமின்றிக் கனிம வளங்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றன. சத்தீஸ்கரில் அரங்கேற்றப்பட்டு வரும் நாடகத்தின் ஒரு சிறு பகுதி இது.

55 போலீசுக்காரர்கள் கொல்லப்பட்டது பயங்கரமானதே. ஆனால் அவர்களும் மற்றவர்களைப் போல அரசின் கொள்கைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டவர்களே. வெறும் பீரங்கித் தீனியாகத்தான் (Cannon fodder) அப்போலீசுக்காரர்களை அரசும், பன்னாட்டு நிறுவனங்களும் கருதுகின்றன. அந்தப் போலீசுக்காரர்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பதை ஆராயப் புகுந்தால் அதில் சொல்வதற்கு ஏராளம் இருக்கிறது.

**'வன்முறையற்ற எதிர்ப்பின் ஒவ்வொரு முயற்சியின் மீதும் அரசு முகத்திலறைந் தாற்போலக் கதவை மூடியிருக்கிறது. மக்கள் ஆயுதம் ஏந்தும்போது எல்லா விதமான, வன்முறைகளும் இருக்கத்தான் செய்யும். தானே உருவாக்கிய இத்தகைய பயங்கரமான சூழலுக்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.'**

செத்துப் போன போலீசுக்காரர்களுக்காகச் சில நாட்களுக்கு முதலைக் கண்ணீர் வடிக்கப்படும். தொலைக்காட்சி தொகுப்பாளர்கள் நம் மீது ஏறி சவாரி செய்வார்கள், பின்னர் மேலும் கூடுதலான பீரங்கித் தீனி சப்ளை செய்யப்பட்டு விடும். மாவோயிஸ்ட் கொரில்லாக்களைப் பொருத்தவரை அவர்களால் கொல்லப்படும் போலீசுக்காரர்களும் சல்வா ஜுடும் சிப்பாய்களும் இந்திய அரசின் ஒடுக்குமுறை எந்திரத்தின் கையாட்கள்; சித்திரவதை, காவல் நிலைய சாவுகள், போலி மோதல்களை நடத்தும் ஆயுதப்படையினர்; அவர்கள் அப்பாவிக் குடிமக்கள் அல்லர்.

மாவோயிஸ்டுகளும் பலவந்தத்திலும், பயங்கரத்திலும் ஈடுபடக் கூடியவர்களே என்பதிலும், சொல்ல இயலாத அடக்குமுறைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதிலும், உள்ளூர் மக்களிடம் தங்களுக்கு விதிவிலக்கற்ற பேராதரவு இருப்பதாக அவர்கள் உரிமை கொண்டாட முடியாதென்பதிலும் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால், அவ்வாறு யார்தான் உரிமை கொண்டாட முடியும்? எனினும், உள்ளூர் மக்களின் ஆதரவின்றி எந்தக் கொரில்லாப் படையும் இயங்க முடியாது. அது நடைமுறைச் சாத்தியமற்றது. மேலும், மாவோயிஸ்டுகளுக்கான ஆதரவு பெருகிக் கொண்டுதான் வருகிறதேயொழிய குறையவில்லை. ............

ஆனால், கணக்கிடலங்கா அநீதிகளுக்கு எதிராகப் போராடும் எதிர்ப்பு இயக்கத்தை, அத்தகைய அநீதிகளைத் திணிக்கும் அரசோடு ஒப்பிடுவது அபத்தமானது.

வன்முறையற்ற எதிர்ப்பின் ஒவ்வொரு முயற்சியையும் அரசு முகத்திலறைந்தாற்போலக் கதவை மூடியிருக்கிறது. மக்கள் ஆயுதம் ஏந்தும்போது எல்லாவிதமான, வன்முறைகளும் இருக்கத்தான் செய்யும். புரட்சிகரமானது, உதிரித்தனமானது, கடைந்தெடுத்த கிரிமினல்தனமானது என எல்லா வன்முறைகளும் வரத்தான் செய்யும். தானே உருவாக்கிய இத்தகைய பயங்கரமான சூழலுக்கு இந்த அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

**'நக்சல்கள்', 'மாவோயிஸ்டுகள்', 'வெளியாட்கள்': இப்பதங்கள் தற்பொழுது வரையறையற்றுப் பயன்படுத்தப்படுகின்றனவே...**

தனது சுயவிளம்பரத்தில் தானே மயங்கிவிட்டதால், தனது சொந்த மக்கள் தனக்கெதிராகக் கிளர்ந்தெழக் கூடும் என்பதை நம்ப இயலாத அரசுகள், அடக்குமுறையின் துவக்க காலகட்டங்களில் பயன்படுத்தும் மிகப் பொதுவான குற்றச்சாட்டுதான் 'வெளியாட்கள்' என்பது. ............ 'வெளியாள்' என்றால் என்ன? யார் எல்லைகளைத் தீர்மானிப்பது? அவை கிராமத்தின் எல்லைக் கோடுகளா? தாலுகாவினதா? மாவட்டமா அல்லது மாநிலமா? குறுகிய பிரதேச வாதமும் இனவாதமும்தான் கம்யூனிசத்தின் புதிய தாரக மந்திரமோ?

நக்சல்கள், மாவோயிஸ்டுகள் ............ யார்? இந்தியா ஒரு போலீசு அரசாக மாறப் போகிறது. தற்போதைய அரசியல் நடப்புகளை ஏற்க மறுப்பவர்கள் யாராக இருந்தாலும் சரி, தாங்கள் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்படும் அபாயத்தை அவர்கள் எதிர்கொண்டாக வேண்டும். ............ நாம் அனைவரும் மாவோயிஸ்டுகள் அல்லது நக்சலைட்டுகள், தீவிரவாதிகள் அல்லது தீவிரவாதிகளின் ஆதரவாளர்கள் என அழைக்கப்படலாம். மாவோயிஸ்ட் அல்லது நக்சலைட் என்றால் யாரென்றே தெரியாத அல்லது தெரிந்து கொள்ள விரும்பாத நபர்களால் நமது கதை முடித்து வைக்கப்படலாம். அத்தகைய காலம் வெகு தொலைவில் இல்லை......

***தமிழாக்கம்: பால்ராஜ்***

www.padippakam.com



## திரைப்பட விமரிசனம்: தோகீ

# என் பாடல் துயரமிக்கது!

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக பத்திரிக்கையாளர் சாய்நாத் இந்திய விவசாய வர்க்கம் நொறுங்கிச் சிதறுவதை உயிருள்ள சாட்சிகளாக தமது ஆங்கிலக் கட்டுரைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். பன்னாட்டு உரக் கம்பெனிகள், விதைக் கம்பெனிகளின் படையெடுப்பின் விளைவாகவும், அவர்களது காலை நக்கி விவசாயிகளின் கழுத்தறுக்க துணை நின்ற அதிகார வர்க்கம், அரசியல்வாதிகளின் துரோகத்தின் விளைவாகவும், மென்னி முறிக்கும் கந்துவட்டிக் கொடுமையின் விளைவாகவும் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட அவ்விவசாயிகளின் வாழ்க்கையை ஆதாரபூர்வமாக அக்கட்டுரைகளில் நாம் காண முடியும்.

கடன் வாங்கிய பணத்தில் மகளின் கல்யாணம், அதே நாளில் மருந்தைக் குடித்துச் செத்த தகப்பனின் கருமாதி, ஊரைவிட்டு வெளியேறி பெயர் தெரியாத ஊரில் அநாதைகளாக மருந்தைக் குடித்துச் செத்துப் போன குடும்பங்கள், தங்கள் உடல்களைக் கூட தங்கள் சொந்த ஊருக்கு அனுப்ப வேண்டாமென கடிதம் எழுதி வைத்துவிட்டு செத்துப் போன விவசாயிகள்.... எத்தனைக் காட்சிகள்?

சிந்தித்துப் பாருங்கள். ஷில்பா ஷெட்டியின் விளம்பர அதிகாரிகளைப் போல அவ்விவசாயிகளுக்கு யாருமில்லை. அதனால் புள்ளி விவரங்களாய் மட்டும் செய்தி ஊடகங்களைக் கடந்து, மறைந்து போய்விட்டனர். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்கள் இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் இன்று என்ன செய்து கொண்டிருப்பார்கள்? குடும்பத்தின் தலைவன் போன பின்னால், அரசின் பிச்சைத் தொகை அவர்களுடைய வாழ்க்கையில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது? அவர்களது வாழ்க்கை தலைகீழாக ஏன் மாறியது என்றாவது அவர்களுக்குத் தெரியுமா? அவர்களை விளிம்பிற்கு நெட்டித் தள்ளும் வாழ்க்கையில் அதிர்ச்சியோ, மனப்போராட்டமோ, கண்ணீரோ, கதையோ இல்லையா? பின்னர் ஏன் இந்த நாட்டின் சிறுகதைகளில், நாவல்களில், செய்திக் கட்டுரைகளில், திரைப்படங்களில் அவர்கள் இல்லை?

பொறுக்கி வீரர்களின் பொறுக்கித்தனங்களிலும், மல்லாக் கொட்டைகளிலும் மாய்ந்தெழுந்து, கிராமப்புறங்களின் 'யதார்த்த' வாழ்வைச் சொல்லும் சினிமாக்களை எடுத்துத் தள்ளிக் கொண்டிருக்கும் படைப்புலக பிரம்மாக்களின் கலை உணர்ச்சி, இந்த யதார்த்தமான, கவர்ச்சியற்ற, தேய்ந்தழியும் உண்மையான கிராமிய வாழ்க்கையை ஏன் கதைக் கருவாக ஏற்க மறுக்கிறது? அவர்களுக்கு, இயல்பான சோகம் 'போர்' அடிக்கிறது.

அத்தகைய 'போர்' அடிக்கும் திரைப்படமொன்றை நான் சமீபத்தில் பார்த்தேன். 1995-இல் சுமித்ரா பாவே என்பவரால் உருவாக்கப்பட்ட ***தோகீ*** (இரு பெண்கள்) எனும் அந்த மராத்திய திரைப்படம், 1996-இல் சமூகப் பிரச்சினைகளுக்கான சிறந்த திரைப்படமாக தேசிய விருது கொடுத்து முடக்கப்பட்டு விட்டது. 'அவார்டு' படம் என்றான பின்னால் அது மக்கள் பார்க்கத் தகாதது என்பது இந்தியச் சினிமாவின் அடிப்படை விதிகளில் ஒன்று. உண்மையில் இத்திரைப்படம் வழக்கமான 'அவார்டு' படங்களுக்கு நேர் எதிரான முறையில் உரக்கப் பேசும் கதாபாத்திரங்கள், பாடல்களுடைய படமே.

> "உடலால் தற்கொலை செய்து கொள்வது அல்லது உள்ளத்தால் தற்கொலை செய்து கொள்வது- இரண்டிலொன்றை மட்டுமே தேர்ந்தெடுக்கும் நிர்ப்பந்தத்திற்கு சமூகம் விவசாயிகளைத் தள்ளுவதை இப்படம் அழுத்தமாக பதிவு செய்கிறது'

••

ஒரு வறிய மகாராஷ்டிர கிராமப்புறத்தில் வாழும் கௌரி, கிருஷ்னே என்ற இளம் சகோதரிகளின் வாழ்க்கை தான் இப்படத்தில் மையக்கரு. மூத்தவளான கௌரியின் திருமணத்திற்கு முந்தைய இரு நாட்களிலிருந்து படம் துவங்குகிறது. உறவினர்கள் சூழ திருமண மகிழ்ச்சியில் குடும்பமே திளைக்கிறது. அதனைக் குலையறுக்கும் விதமாக மணமகன் வீட்டார் மொத்தமும் வரும் வழியில் விபத்தில் இறந்து விட்ட செய்தி வந்திறங்குகிறது. அதிர்ச்சியில் தகப்பனுக்கு வாதம் வந்து விடுகிறது. குடும்பம் இடிந்து போகிறது.

அதிர்ஷ்டம் கெட்ட சனியனாக கௌரி ஊரால் பழிக்கப்படுகிறாள். வாதத்தினால் படுக்கையில் கிடக்கும் கணவனையும், இரு மகள்களையும், சிறுவனான மகனையும், மூழ்கடிக்கும் கடன்களையும் சுமக்க வழியின்றி கௌரியின் தாய் திணறுகிறாள். நிலங்களையும், மாடுகளையும், எஞ்சியிருக்கும் நகைகளையும் விற்று உயிர் வாழப் போராடுகிறாள். கடன்காரர்கள் சுற்றி நெருக்குகிறார்கள். நாட்பட நாட்பட கௌரி பித்துப் பிடித்தவள் போல நிலை வெறித்துக் கிடக்கிறாள். ஊர் அவளை சூனியக்காரி என ஏசுகிறது.

செய்வதறியாமல் விசும்பும் தாய், பம்பாயில் மில்லில் வேலை செய்யும் தனது தம்பிக்குக் கடிதம் எழுதி வரவழைக்கிறாள். கௌரி இங்கே ஊராரிடம் வதைபடுவதிலிருந்தும், அவளால் அவளது தங்கை, தம்பி வாழ்க்கையும் பாதிக்கப்படுவதிலிருந்தும், சோத்துக்கே வழியற்றுக் கிடக்கும் நிலையிலிருந்தும் விடுபட, அவளை பம்பாய்க்கு அழைத்துச் சென்று ஏதேனும் வேலைக்குச் சேர்த்து விடும்படிக் கூறுகிறாள். சிந்திக்கும் தம்பி 'சரி அழைத்துச் செல்கிறேன், ஆனால் என்ன வேலை எனக் கேட்கக் கூடாது, மணியார்டர் மட்டும் மாதாமாதம் வந்து விடும்' என்கிறான். அதிர்ந்து போகிறாள் தாய். வேதனையில் குமுறியவாறு, இறந்து போன மாப்பிள்ளை வீட்டாரோடு மகள் திரும்பிப் போகும்பொழுது இறந்ததாகக் கருதிக் கொள்ள வேண்டியது தான் என்கிறாள்.

இரவு முழுவதும் தூங்காமலிருக்கும் தாய், அதிகாலையில் தம்பியை எழுப்பி கௌரியை அழைத்துச் செல்லும்படி கூறுகிறாள். இவையெதுவும் அறியாத கௌரி, ஏதோ வேலைக்குச்

www.padippakam.com

செல்வதாகக் கருதி மாமனோடு ஊரிலிருந்து மௌனமாக வெளியேறுகிறாள். பரிதவிப்போடு கிருஷ்னேயும், அவளது தம்பியும் அவளைப் பின் தொடர்ந்து சென்று வழியனுப்பி வைக்கிறார்கள்.

மாதா மாதம் மணியார்டர் வருகிறது. மணியார்டர் பணத்தை வாங்கும் நாளில் தாய்க்கும் கிருஷ்னேக்கும் இடையே ஒரு இறுக்கமான மௌனம் நிலவுகிறது. தன்னுடைய அக்காள் எங்கேயோ உடல் வருந்த உழைத்து பணம் அனுப்புகிறாள் என வருந்தும் கிருஷ்னே, மணியார்டர் துண்டுக் காகிதத்தைக் கூட சேர்த்து வைக்கிறாள். ஒரு கனத்த மௌனத்தினூடாகக் காலம் உருண்டோடுகிறது.

பம்பாயிலிருந்து மாமன் வீட்டிற்கு வருகிறான். இரவில் தாய் அவனிடம் கௌரி குறித்து வினவுகிறாள். அவன் தான் அங்கே போவதில்லை என்கிறான். தானும் முன்பெல்லாம் அங்கே சென்று கொண்டிருந்ததாகவும், இப்பொழுது அங்கே செல்ல மனம் வரவில்லை எனவும் கூறுகிறான். தான் ஒரு பெரும் பாவம் செய்து விட்டதாகவும், உணவும், உறக்கமும் கூட அற்றுப் போய் விட்டதாகவும் வருந்துகிறான்.

கிருஷ்னேக்கு மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் ஒரு இளைஞனோடு திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. மாதா மாதம் வரும் மணியார்டரோடு இம்முறை முதல் முறையாக கௌரியிடமிருந்து கடிதம் வருகிறது. திருமணம் குறித்து அறிந்து கொண்டதாகவும், புடவைகள், பட்சணங்களோடு தான் வருவதாகவும் அக்கா கூறுகிறாள். வெம்மை படர ஊரை விட்டுச் சென்ற கௌரி, ஒரு அதிகாலைப் பொழுதில் வந்து சேர்கிறாள்.

அக்காவினுடைய பகட்டான சேலையையும், முகத்தில் தோன்றும் அந்நியப்பட்ட தன்மையையும் கண்டு கிருஷ்னே துணுக்குறுகிறாள். தனது கல்யாணத்தோடு அவளும் கல்யாணம் செய்து கொண்டாலென்ன எனக் கேட்கிறாள். தனக்கு நிறையவே கல்யாணங்கள் நடந்து முடிந்து விட்டதாகவும், இனி தனக்குக் கல்யாணம் செய்து கொள்ள விருப்பமில்லையெனவும் கௌரி கூறுகிறாள். புரியாத கிருஷ்னே, 'நீ ரொம்பவும் மாறிப் போய்விட்டாய் அக்கா' என்கிறாள். குளித்துக் கொண்டிருக்கும் கௌரிக்கு நீரூற்றச் செல்லும் தாய், அவளது முதுகிலுள்ள தீக்காயத்தைக் கண்டு ஸ்தம்பித்து நிற்கிறாள்.



உறவினர்கள் வருகின்றனர். திருமணத்திற்கு முதல் நாள் சடங்குகள் நடக்கின்றன. பெண்களோடு இணைந்து இனிப்புகள் பரிமாறத் தட்டெடுக்கும் கௌரியை, தாய் முறைக்கிறாள். நீ ஏன் குறுக்கே வருகிறாய் எனக் கடிந்து கொள்கிறாள். கௌரி மௌனமாக வெளியேற, ஆத்திரம் கொள்ளும் கிருஷ்னே, "கௌரி வேண்டாம், ஆனால் கௌரி கொடுக்கும் காசு மட்டும் உனக்கு வேண்டுமா?" என் வாதிடுகிறாள். பதில் பேச முடியாமல் தாய் அறையை விட்டு வெளியேறுகிறாள். கௌரியைப் பின் தொடரும் கிருஷ்னே, வேண்டுதல் துணி முடியும் மரத்தினடியில் அவளைக் காண்கிறாள். அவளருகில் மௌனமாகச் சென்றமர்கிறாள்.

அந்தப் பக்கமாய், மாப்பிள்ளையும், அவனது நண்பர்களும் உலவ வருகிறார்கள். அவர்களைப் பார்த்ததும் குமுறியெழும் கிருஷ்னே, அவர்களை நோக்கிக் கத்துகிறாள். "இங்கே பாருங்கள், இவள்தான் என்னுடைய அக்கா, இவள் என்னை விட நன்றாகப் பாடுவாள். என்னை விட்டு விடுங்கள். இவளைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். சமூக மாற்றத்திற்காகப் போராடுகிறீர்களே, இதோ என்னுடைய அக்காக எங்களுக்காக உழைத்து உழைத்து தேய்ந்து நிற்கிறாள். இவளுக்கு வாழ்க்கை கொடுங்கள்!" எனக் கதறும் கிருஷ்னேயை, கௌரி இழுத்துச் செல்கிறாள். மாப்பிள்ளையும், நண்பர்களும் புரியாமல் நிற்கின்றனர்.

திருமணம் நடக்கிறது. ஒதுங்கி நிற்கும் அக்காவை நொடிக்கொரு முறை கிருஷ்னே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொள்கிறாள். அவள் பார்வையின் திசை வழியே எல்லோரும் கௌரியைப் பார்த்து சங்கடமான மௌனத்தில் ஆழ்கிறார்கள். கௌரி மெல்ல விலகி மறைகிறாள். தாலி கட்டும் நேரத்தில் எழுந்து வெளியேறும் கிருஷ்னே, அக்காவைத் தேடியோடுகிறாள். அனைவரும் அதிர்ச்சியுறுகின்றனர். ஊரை விட்டு வெளியேற நடந்து செல்லும் கௌரியை, கிருஷ்னே வந்து பிடித்துக் கொள்கிறாள். அவள் பம்பாய்க்குப் போக வேண்டாமென்றும், எப்படியாவது இங்கேயே கஷ்டப்பட்டு தலை நிமிர்த்தி முன்னேறுவோம், அவமானமும், சார்ந்திருக்கும் அவலமும் வேண்டாம் எனக் கூறுகிறாள்.

மாமனும் வந்து சேர்கிறான். கௌரி ஊரை விட்டுப் போக வேண்டாமென்றும், தாங்கள் அனைவரும் செய்து விட்ட பாவத்தை மன்னிக்கும்படியும் வேண்டுகிறான். கௌரியை திருமண வீட்டிற்குத் திரும்ப அழைத்து வரும் கிருஷ்னே, காத்திருக்கும் எல்லோருக்கும் முன்பாக அம்மாவிடம் கௌரி திரும்ப வந்திருப்பதைக் கூறுகிறாள். கௌரியை கட்டித் தழுவிக் கொள்ளும் தாய், இனி அவள் பம்பாய் போக வேண்டாமென்றும் பட்டினி கிடந்து செத்தாலும் சரி, இங்கேயே இருக்குமாறும் வேண்டியழுகிறாள். படம் முடிவடைகிறது.

••

இக்கதை விவசாயிகளின் பிரச்சினையை, அவர்களது வாழ்க்கையைப் புரட்டிப் போடும் உண்மையான சக்திகளை நேரடியாகச் சொல்லவில்லை. வாதத்தில் விழுந்த கௌரியின் தந்தை வாதத்தில் விழுந்த விவசாயத்தின் உருவகம் என்றும் கொள்ளலாம். ஒரு வேளை மணமகனின் குடும்பம் விபத்தில் சாகாமல் இருந்திருந்தால், விவசாயி வாதத்தில் விழாமல் இருந்திருந்தால், என்ன நிகழ்ந்திருக்கும்?

மான்சாண்டோ விதைகளைப் பயிரிட்டு மகசூலுக்காகக் காத்திருந்து, பின்னர் பொய்த்துப் போன பருத்திப் பயிர்களைக் கண்டு மனமொடிந்து செத்த விவசாயிகளைப் போல, அவர் தற்கொலை செய்து கொண்டிருப்பார். குடும்பமே தற்கொலை செய்து கொள்ளலாமென முடிவு செய்யாத பட்சத்தில், கதையில்

www.padippakam.com

நிகழ்ந்ததைப் போலவே கௌரி மும்பைக்கு ரயிலேறியிருப்பாள். உடலால் தற்கொலை செய்து கொள்வது அல்லது உள்ளத்தால் தற்கொலை செய்து கொள்வது - இரண்டிலொன்றை மட்டுமே தேர்ந்தெடுக்கும் நிர்ப்பந்தத்திற்கு சமூகம் அவர்களைத் தள்ளுவதை இப்படம் அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

ஒரு விவசாயியைப் பொறுத்தவரை தான் கொண்டிருக்கும் அறம் சார்ந்த விழுமியங்களிலிருந்து வழுவுவதென்பது ஒரு வகை மரணம்தான். உண்மையான மரணத்தை எதிர்கொள்வதற்கு அதிகம் தடுமாற்றம் காட்டாத தாய், மகளை பம்பாய்க்கு அனுப்பும் முடிவில் லேசாகத் தடுமாறுகிறாள். பம்பாயில் என்ன வேலை என்று மாமன் உடைத்துச் சொல்லவில்லை. சொல்லாத போதிலும் விளங்கிக் கொள்கிறாள் தாய். பசி அறத்தைத் தின்னுகிறது.

இப்படித்தான் மும்பையின் சிவப்பு விளக்குப் பகுதிகளின் வீதிகளில் ஒவ்வொரு நாளும் கௌரிகள் வந்திறங்குகிறார்கள். கௌரிகளுடைய நிலங்களையும், வயல்களையும், பன்னாட்டுக் கம்பெனிகள் துகிலுரியு வழிவகுத்த அரசியல்வாதிகள், அதிகாரிகள் முதல் போலீசுக்காரன், பொறுக்கி வரை அனைவரும் அவர்களைத் துகிலுரிகிறார்கள்.

இன்று சிங்கூரிலிருந்தும், நந்திகிராமத்திலிருந்தும். விரட்டியடிக்கப்படும் விவசாயிகள் நாளை கல்கத்தாவில் அத்துக் கூலிகளாய் வந்து வீழ்வார்கள். ரத்தன் டாடாவும், மார்க்சிஸ்டுகளும் கோடிகளையும், நிலங்களையும் பண்டம் மாற்றிக் கொண்டு படுத்துறங்கும் வேளையில் கௌரிகளும், கிருஷ்னேகளும் சோனாகஞ்சியில் துகிலுரியப் படுவார்கள்... வேற்றுமையில் ஒற்றுமை கண்ட இந்தப் புண்ணிய தேசத்தின், இந்த வளர்ந்து வரும் வல்லரசின் சாதனைகளில் ஒன்று என்ன?

மொழி, இன, சாதி எல்லைகளைக் கடந்து உ.பி.யிலிருந்தும், பீகாரிலிருந்தும், மகாராட்டிரத்திலிருந்தும், ஆந்திராவிலிருந்தும் 'நூறு ரூபாய்க்கு கூட பெறுமானமில்லாத' மூஞ்சிகளைப் பெற்ற (உபயம்: பருத்திவீரன்) விவசாய வர்க்கப் பெண்கள் தேசிய நெடுஞ்சாலைகளில் காமாட்டிப்புராவில், சோனாகாஞ்சியில் கைகாட்டி நிற்கிறார்கள். நேபாளப் பெண்கள் மும்பை விப்சார சந்தையில் 3,4 ஆண்டுகள் தம்மை விற்று தமது திருமணத்திற்கான தொகையைச் சேமித்துக் கொண்டு சென்று, திருமணம் செய்து கொள்கிறார்கள். மாதாமாதம் வீட்டுக்கு மணியார்டர் போகிறது.

இப்படத்தில் வரும் கௌரியின் மாமன் மன உறுத்தலால் விபச்சார விடுதிக்குப் போவதையே விட்டு விடுகிறான். கன்னட பிரசாத் எனும் விபச்சாரத் தரகனைப் பற்றி செய்தியெழுதும் போர்வையில் அவனது ஆல்பத்திலுள்ள நடிகைகளின் பெயர்களை மயிர் பிளக்கத் துப்பு துலக்கி, பின்னடித்த புத்தகங்களை மிஞ்சும் வகையில் சர்வ அவசியத் தகவல்களோடு, வாசகனின் சபலத்தைத் தூண்டும் மஞ்சள் பத்திரிக்கைகளின் புரோக்கர் கண்ணோட்டத்தையும், அதனையே ஒரு விவசாயியின் கண்ணோட்டத்தில் சொல்லும் இத்திரைப்படத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

விவசாயிகளுடைய வாழ்க்கைச் சித்திரத்தின் மையக் கோடுகளைத் தொட்டு விரிந்து, விமரிசனப் பார்வையோடு இப்படம் மிளிரவில்லை என்பது உண்மைதான். ஆனால், உலகமயமாக்கம் வழங்கும் கோலாகலமான, செயற்கை உலகத்தில், விமரிசனமில்லாத இந்த யதார்த்தம் கூட மதிக்கத்தக்க மாற்றாகத்தான் இருக்கிறது.

பெண் பார்க்கும் நிகழ்வில் பாடச் சொல்லும் பொழுது, தொலைதூரத்தில் வருந்த உழைக்கும் தனது அக்காளின் நினைவாகவே வாழும் கிருஷ்னே அத்தருணத்தில் கூடத் தங்களது கையறு நிலையை மறக்கவியலாது பாடுகிறாள்.

*''நிலம் பாளங்களாக*
*வெடித்துக் கிடக்கிறது.*
*துளிநீர் கூட கண்ணில்*
*தட்டுப்படவில்லை.*
*என் பாடல் துயரம் மிக்கது,*
*என் பாடல் துயரம் மிக்கது.''*

● பால்ராஜ்

## இலவசம் வந்தது: இல்லம் தொலைந்தது!

வந்து சேர்ந்தது வீட்டுக்கு
வண்ணத் தொலைக்காட்சி
வைத்துப் பார்ப்பதற்கேற்ற
வாட்டமான இடம்
விவாதத்துக்கிடையில்
ஒருவழியாக முடிவானது.
கூடத்து மூலையில் கிடந்த
கிழவியின் படுக்கை
திண்ணைக்குப் போனது
கேட்க ஆளின்றி
பாட்டியின் கதைகளும், அனுபவமும்
பேச்சு மறந்து வீணாய்ப் போனது.

ஆட்டிவிடும்போது
தொலைக்காட்சிக்கு
அடிபட்டுவிடும் என்று
குழந்தையின் தொட்டிலும்
கழட்டப்பட்டது.
முன்வாசலில்,
கேபின் கொடி படர்வதற்கு
இணங்காத
முருங்கையின் கிளை
முறிக்கப்பட்டது.

ஆறுமணி தொடர் பார்ப்பதற்கு
ஊறு நேராதவாறு
ஐந்து மணிக்கெல்லாம்
கோழியின் கூடை கவிழ்க்கப்பட்டது.
தண்ணீர் வேண்டி கத்திப்பார்த்த
சினையாடு
கண்டு கொள்ள ஆளில்லாமல்
வேலிதாண்டி கர்ப்பம் கலைந்தது.

படாத இடத்தில்
தொலைக்காட்சிக்குப்
பட்டுவிட்டால் வருமா எனப்பயந்து
பையனின் 'ஒளிந்து பிடித்து'
விளையாட்டும்
வீட்டை விட்டு விரட்டப்பட்டது.

விளம்பர இடைவேளைக்கிடையே
கொஞ்சம் விசாரிப்பு பின்பு
வெடுக்கென்று முகத்தை திருப்பி
'கோலங்கள்'.
குடும்பத்தின் 'கவனிப்பு' தாங்காமல்
சொல்லாமலே ஓடிப்போனான்
சொந்தக்காரன்.
தொலைக்காட்சிப் பூவில்
தேனெடுக்கத் தவித்து
சுருண்டு விழுந்த வண்டைப் பார்த்து
பரிதாபத்தோடு
'இச்சு' கொட்டியது பல்லி.

மனிதக்குரலற்று வெறிச்சோடிய
வீதியைப் பார்த்து
பீதியுற்று அலறியது தெருநாய்.
கதவைத் திறந்து கொண்டு
வந்தவனின்
மனிதக்குரைப்பைக் கேட்டு
நடுங்கிப் போனது நாய்.
"ச்சீ... நல்ல நாடகம் ஓடுறப்ப
இங்க வந்தா கத்துற நாயே...!" என
அடிக்கப் பாய்ந்து வந்த
குடும்பத்தலைவனின் விழிகளில்
இதற்கு முன் இப்படியொரு
வெறித்தனத்தைப்
பார்த்திராத தெருநாய்
உயிர்ப்பிழைத்தால் போதுமென்று
ஊரை விட்டே ஓடியது.

● துரை. சண்முகம்

www.padippakam.com






**இந்தியா தழுவிய மக்கள் உழைப்பினால் உருவான கோயம்பேடு,**

**பகலில் உயிர்த்திருக்கும் சென்னைக்கு உணவிடுவதற்காக இரவில் அயராது பாடுபடுகிறது. அந்த உழைப்பின் காட்சிகள் சில.....**





ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!
படிப்பகம்

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)


REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN / CCN / 84 / '06-'08

www.padippakam.com





படிப்பகம்